வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 06.10.2021 புதன்கிழமை | இதழ் : 305 | பக்கங்கள் : 16




# சீனாவுடனான உறவு குறித்து சந்தேகம் கொள்ளவேண்டாம்!

## இந்திய வெளிவிவகார செயலரிடம் ஜனாதிபதி கோட்டாபய எடுத்துரைப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 06

“இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடிய எந்தவொரு செயல்பாட்டுக்கும் இலங்கையைப் பயன்படுத்திக்கொள்ள இடமளிக்கப் போவதில்லை”, என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவிடம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று உறுதிபடத் தெரிவித்தார்.

15



## சாவகச்சேரியில் விபத்து; முதியவர் உயிரிழப்பு

தென்மராட்சி, ஒக். 06

சைக்கிளில் பயணித்த வரை ‘பட்டா’ ரக வாகனம் மோதிய விபத்தில் முதியவர் ஒருவர் மரணமானார்.

தென்மராட்சி - சாவகச்சேரி நகரப்பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் அதே இடத்தை சேர்ந்த நடராசா பொன்னுச்சாமி (வயது 64) என்பவரே உயிரிழந்தார்.

வீதியோரத்தில் தரித்து நின்ற வாகனத்தை சைக்கிளில் முதியவர் விலகிச் செல்ல முற்பட்ட போது எதிரே வந்த ‘பட்டா’ ரக வாகனம் அவரை மோதியதாக கூறப்படுகின்றது.

இதில் முதியவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது.

இந்த விபத்துக் குறித்து சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

# புலம்பெயர் தமிழருடன் இணக்கத்துக்கு அரசு வந்தால் அதற்கு ஆதரவளிப்போம்

## பாராளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, ஒக். 06

“பயங்கரவாத தடைச் சட்டத்தை மாற்றினால் மாத்திரம் போதாது. 20ஆவது திருத்தத்தை மீள மாற்ற வேண்டும். ஐரோப்பிய ஒன்றியக் குழுவினர் இங்கு அதிகாரப் பகிர்வு இல்லை என்பதனை சுட்டிக்காட்டியுள்ளனர். 17 ஆவது திருத்தத்தை கொண்டு வந்தவரே 18 க்கு ஆதரவளித்து பின்னர் 20 ஆவது திருத்தத்திற்கும் ஆதரவளித்துள்ளார். இவ்வாறான சந்தர்ப்பவாதிகளால் சர்வதேசத்தை வெற்றிக்கொள்ள முடியாது” என்று தெரிவித்த என்று எதிர்க்கட்சி பிரதம கொறடாவான பாராளுமன்ற

15

# உயர்தர, சாதாரண தர பரீட்சைகள் குறிப்பிட்ட திகதிகளில் வேண்டாம்

## பாராளுமன்றத்தில் அமைச்சர் சுசில் கருத்து

கொழும்பு, ஒக். 06

கல்வி பொது தரா தர உயர் தர, சாதாரண தரப் பரீட்சைகளை குறிக்கப்பட்டுள்ள திகதிகளில் நடத்தக்கூடாது என்பதே தனது தனிப்பட்டக் கருத்து என கல்விச் சீர்திருத்தங்கள், திறந்த பல்கலைக் கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்

15

## இந்திய வெளியுறவு செயலர் புதுடில்லி திரும்பினார்

கொழும்பு, ஒக். 06

நான்கு நாள்கள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்த இந்திய வெளிவிவகார செயலர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா புது டில்லி நோக்கி நேற்று பயணமானார்.

இந்திய வெளிவிவகார செயலர் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடினார்

இதன் போது இரு நாடுகளுக்கும் இடையிலான முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டது.

# 782 தொற்றாளர்கள் நேற்று அடையாளம்

கொழும்பு, ஒக். 06

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 782 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று

15

# கொரோனா தொற்றால் மேலும் 40 பேர் மரணம்!

கொழும்பு, ஒக். 06

நாட்டில் கொரோனாத் தொற்றால் மேலும் 40 பேர் உயிரிழந்தனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்தன உறுதிப்படுத்தியுள்ளார்.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த

15

# வடக்கில் 680 பாடசாலைகள் 21ஆம் திகதி ஆரம்பமாகும்!

## ஆளுநர் சார்ள்ஸ் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 06

வடக்கு மாகாணத்தில் தரம் 1 தொடக்கம் 5 வரையான வகுப்புகளை கொண்ட 680 பாடசாலைகள் எதிர்வரும் 21ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்படும் என்று ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ் அறிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள பாட

15

# யாழ். பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா நாளை!

## நிகழ்நிலையில் மட்டுமே இடம்பெறும்

யாழ்ப்பாணம், ஒக். 06

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது அமர்வு நாளை வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது. நிகழ்நிலையில் இடம்பெறும் இந்த விழாவுக்கான சகல ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளன என்று

15




**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது...!

மாட்டுக்கு மாடு சொன்னால் கேட்காதாம், மணி கட்டின மாடு சொன்னால்தான் கேட்குமாம் என்றொரு பழமொழி நம் மத்தியில் சொல்லப்படுவதுண்டு.

இந்தியாவின் உதவி பதின்மூன்றுக்கு மேல் இருக்காது என்றும், அதனை தமிழ் மக்கள் தமது தீர்வாக ஏற்றுக்கொண்டு பயணிப்பதுதான் புத்திசாலித்தனமானது எனவும் இந்தப் பத்தியில் ஒன்றுக்கு பல தடவைகள் சொல்லியிருக்கின்றோம்.

'ஈழநாடு' ஆசிரியரும் பல தடவைகள் தனது தலையங்கத்தில் இந்த விடயத்தை வலியுறுத்தியிருந்தார்.

இந்திய வெளியுறவு செயலரின் வருகையையொட்டி அரசியல் ஆய்வாளர் யதீந்திரா, கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு எழுதிய பகிரங்க மடலில், புதிய அரசியலமைப்பு என்று பழைய பல்லவியைப் பாடாமல், பதின்மூன்றை முழுமையாக நடைமுறைப்படுத்த இந்தியா உதவ வேண்டும் என்ற கோரிக்கையை சம்பந்தன் தனது சந்திப்பில் வலியுறுத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்நிலையில் கூட்டமைப்புடனான சந்திப்பின் பின்னர் வெளிவந்த செய்திகள் ஒன்றைத் தெளிவாக உணர்த்தியிருக்கின்றன.

"அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் தமிழ் மக்களின் அதிகாரப் பரவலாக்கல் இடம்பெறவேண்டுமென்ற நிலைப்பாட்டிலிருந்து இந்தியா பின்வாங்கவில்லை. உடனடியாக தேர்தலை நடத்தி, மாகாண சபை முறையை அமுல்படுத்த வேண்டும் என்ற அழுத்தத்தை இலங்கை அரசுக்கு வழங்குகின்றோம். எனினும், 13ஆவது திருத்தத்தின் அடிப்படையிலான தீர்வு வேண்டும் என்ற ஒரு விடயத்திலாவது தமிழ்த் தரப்புகள் ஒரே குரலில் வலியுறுத்த வேண்டும். இந்த விடயத்தில் தமிழ்த் தரப்புகளின் கோரிக்கை அழுத்தமாக இல்லை என்பதே இந்தியாவின் நிலைப்பாடு.", இந்திய வெளியுறவு செயலர், கூட்டமைப்பினருக்கு சொன்ன தெளிவான செய்தி இது.

விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் அரசியல் தலைமையை தம் வசம் வைத்திருந்த காலத்தில், அவர்கள் தமிழீழம் என்ற தமது இலட்சியத்திலிருந்து இம்மியளவும் விட்டுக்கொடுக்க தயாராக இருக்கவில்லை.

சில விட்டுக்கொடுப்புக்களை செய்யவேண்டும் என்று அன்ரன் பாலசிங்கம் பல தடவைகள் முயன்ற போதிலும் பிரபாகரன் அதற்கு தயாராக இருக்கவில்லை என்று கூறப்படுவதுண்டு.

ஆயுத ரீதியாக பலம்பொருந்திய இயக்கமாக இருந்த புலிகள் தமது ஆயுத பலத்தால் தமிழீழத்தை அடையலாம் என்று நம்பிக்கெண்டிருந்தனர். அதனால் அதற்கு குறைந்த எந்தத் தீர்வையும் ஏற்றுக்கொள்ள அவர்கள் தயாராக இருக்கவில்லை.

ஆனால், இன்று நிலைமை சர்வதேசத்தை மாத்திரம் நம்பிக் கொண்டிருக்கின்ற நிலைமையில் நாம் இருக்கின்றோம் என்பதை ஏற்றுக்கொள்கின்ற நமது அரசியல் தலைவர்கள், புலிகளின் பாணியில் தொடர்ந்து அடம்பிடிப்பது எதனால் என்பது அவர்களுக்கு மட்டுமே புரிந்த ஒன்று.

சர்வதேசம் என்பது என்னதான் அமெரிக்கா, பிரிட்டன், கனடா என்று நாம் நம்பினாலும் இதில் எந்த நாடுமே இந்தியாவின் விருப்பத்திற்கு மாறாக நமக்கு உதவப்போவதில்லை என்பது 'அரசியல் குழந்தை'களுக்கும் தெரிந்த சங்கதி.

இதேபோல, இந்தியாவும், பதின்மூன்றுக்கு மேலே செல்ல விரும்பாது என்பதும் தெரிந்ததுதான்.

இந்த நிலையில் பதின்மூன்றை முழுமையாக, ஏன் அதிலுள்ள சில குறைபாடுகளையும் நிவர்த்திசெய்து தருமாறு தமிழர்கள் ஒட்டுமொத்தமாக ஒரேகுரலில் இந்தியாவிடம் கேட்கவேண்டும் என்று இந்தப் பத்தியில் பல தடவைகள் நாம் வலியுறுத்தியிருந்தோம்.

நமக்கு வேண்டாம் என்பதை கொடுங்கள் என்று இலங்கை அரசிடம் கேட்கின்ற தார்மீக உரிமையை இந்தியா இழந்துவிட்டிருக்கின்றது என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தோம்.

இன்றைய அரசாங்கம் புதிய அரசியலமைப்பை கொண்டுவர ஆயுத்தமாகியிருப்பதும், அதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை அது தொடக்கியிருப்பதும் தெரிந்தவையே.

இந்த நேரத்தில் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளமுடியாத விடயங்களை கடந்த ஆறு தசாப்தங்களாக வலியுறுத்திக் கொண்டிருப்பதுபோல வலியுறுத்திக் கொண்டிருக்கப் போகின்றோமா? அல்லது, பதின்மூன்றை முழுமையாக இன்னும் சிறப்பாக மீண்டும் புதிய அரசியலமைப்பில் உள்ளீர்க்கவேண்டும் என்று கோரிக்கை வைத்து அதனைத் தக்க வைக்கப்போகின்றோமா என்பதே இன்று நம்முன் உள்ள கேள்வி.

மாடுகள் நாங்கள் பல தடவை இந்தப் பத்தியில் வலியுறுத்தியதை மணிகட்டின மாடு, இப்போது சொல்லியிருக்கின்றது. ஏற்று நடக்கிறார்களா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.!

**- ஊர்க்குருவி**

# வடக்கில் நேற்று 25 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், ஒக். 06

யாழ். மாவட்டத்தில் 12 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் நேற்று 25 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீடம், யாழ். போதனா மருத்துவமனை ஆய்வுகூடங்களில் நடத்தப்பட்ட பி. சி. ஆர். சோதனையிலேயே இந்த விடயம் வெளியானது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று 71 பேரின் மாதிரிகள் பி. சி. ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதில் வவுனியா சிறையில் ஒருவருக்கு 20 வயது இளைஞருக்கு மட்டும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதேவேளை, யாழ். போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் நடத்தப்பட்ட பி. சி. ஆர். சோதனைகளில் 24 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதன்படி சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் 05 பேர், நெதேர்ன் சென்றல் தனியார் மருத்துவமனையில் 03 பேர், யாழ். போதனா மருத்துவமனையில் 02 பேர் , பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒருவர் , தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் ஒருவர் என யாழ். மாவட்டத்தில்12 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதேசமயம், முழங்காவில் கடற்படை முகாமில் 5 பேருக்கும், இரணைமடு விமானப் படை முகாமில் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது.

மன்னார் கடற்படை முகாமில் 3 பேருக்கும், முல்லைத்தீவு மருத்துவமனையில் ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப் பட்டது. (ஐ)

## நாவற்குழி கொள்ளை சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், ஒக். 06

நாவற்குழியில் தாயையும் மகனையும் தாக்கி கொள்ளையில் ஈடுபட்ட இரு சந்தேகநபர்களை யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான இருவரும் 2020ஆம் ஆண்டு தெல்லிப்பழையில் வீடொன்றில் 32 பவுண் தங்க நகைகளைக் கொள்ளையிட்டு தேடப்பட்டவர்கள் என்பது தெரியவந்துள்ளது.

இந்த கைது நடவடிக்கை நேற்று முன்னேடுக்கப்பட்டது. நாவற்குழியில் கடந்த சனிக்கிழமை வீடு ஒன்றில் புகுந்த கொள்ளையர்கள் இருவர், அங்கு வசித்த தாயையும் மகனை கட்டை ஒன்றினால் கடுமையாக தாக்கி நகைகளை தருமாறு துன்புறுத்தியுள்ளனர். பின்னர் 5 ஆயிரம் ரூபாய் பணத்தையும் 80 ஆயிரம் ரூபாய் பெறுமதியான அலைபேசியையும் கொள்ளையிட்டுத் தப்பித்தனர். சம்பவத்தில் படுகாயமடைந்த தாயும் மகனும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் 23, 26 வயது இளைஞர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரையும் நேற்று நாவற்குழி பகுதியில் வைத்து பொலிஸார் கைது செய்தனர். (ஐ)

## கல்வி TV CHANNEL-1

**06.10.2021**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் மறு ஒளிபரப்பு | மாதிரி வினாத்தாள் மறுஒளிபரப்பு-LIVE கணிதம் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

## கல்வி TV CHANNEL - 2

**06.10.2021**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
06.10.2021 புதன்கிழமை
பிலவ வருடம், புரட்டாசி 20

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk, news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# இந்தியா சொன்னதும் சொல்லாததும்?

இந்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த, இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர், ஹர்ஷ் வர்தன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களை கொழும்பில் சந்தித்து கலந்துரையாடியிருந்தார். இதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர்களையும் நட்பு அடிப்படையில் சந்தித்திருந்தார். யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சந்திப்பு அரசியல் ரீதியானதாக அமையாவிட்டாலும்கூட, சந்திப்பில் பங்குகொண்டிருந்த தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் தங்களின் அரசியல் அபிப்பிராயங்களை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

கூட்டமைப்புடனான சந்திப்பின்போது, தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் தொடர்பான புதுடில்லியின் நிலைப்பாட்டை ஹர்ஷ் வர்தன் அழுத்தம் திருத்தமாக தெரிவித்திருக்கின்றார். அதேவேளை வழமையாக 1948 இலிருந்து வரலாற்றை நினைவுபடுத்த முற்படும் இரா. சம்பந்தன், இந்த சந்திப்பின்போது, 13வது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பிலும், அரசாங்கம் மாகாண சபை தேர்தலை தொடர்ந்தும் பிற்போட்டு வருவது தொடர்பிலுமே பேசியிருக்கின்றார்.

இந்த சந்திப்பின்போது வெளிவிவகார செயலர், 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பில், தமிழ் கட்சிகள் அனைத்தும் ஓரணியில் நிற்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருக்கின்றார். ஆகக் குறைந்தது இந்த விடயத்திலாவது தமிழ் கட்சிகள் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். ஏனெனில், 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான அரசியல் தீர்வு தொடர்பான விடயத்தில் தமிழ் கட்சிகள் காண்பிக்கும் ஈடுபாடு போதுமானதாக இல்லை என்றும் வர்தன் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

ஹர்ஷ் வர்தனின் கருத்துக்கள் அனைத்துமே ஏற்கனவே இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் குறிப்பிட்டுச் சென்றிருக்கும் கருத்துக்களின் தொடர்ச்சிதான். புதுடில்லியின் கொள்கை சார்ந்த விடயங்களில் செல்வாக்குச் செலுத்த வல்லவர்களில் ஜெய்சங்கர் ஒருவரே தமிழர் பிரச்னை தொடர்பில் முழுமையாக அறிந்தவர். இலங்கையின் சிக்கல்கள் அவருக்கு நன்கு தெரியும். ஏனெனில், இந்திய - இலங்கை ஒப்பந்த காலத்தில், அவர் கொழும்பில் அரசியல் செயலாளராக இருந்த ஒருவர்.

ஜெய்சங்கரின் விஜயத்தின்போது அவர் தெரிவித்திருந்த கருத்துக்கள், தற்போது, ஹர்ஷ் வர்தன் தெரிவித்து சென்றிருக்கும் கருத்துக்கள் அனைத்தையும் தொகுத்து நோக்கினால் ஒரு விடயம் வெள்ளிடைமலை. அதாவது, இந்தியா ஒரு விடயத்தை அழுத்தம் திருத்தமாக தமிழர்களுக்கு கூறியிருக்கின்றது. அதாவது, 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான ஓர் அரசியல் தீர்விற்கே புதுடில்லி ஆதரவு வழங்கும். அதிலும் தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டு நிற்கவேண்டும். தமிழ் கட்சிகள் மாகாண சபை விவகாரத்தில் போதிய அக்கறையை காண்பிக்காவிட்டால் புதுடில்லியால் ஒன்றும் செய்ய முடியாது.

இனியாவது தமிழ்த் தேசியத்தை பெயரில் வைத்திருக்கும் கட்சிகள் அனைத்தும் இந்த விடயத்தில் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். அதனைவிடுத்து தற்போதைய சூழலில், நடக்க முடியாத விடயங்களை புதுடில்லியிடம் கூறிக் கொண்டிருப்பதால் எந்த நன்மையும் ஏற்படப்போவதில்லை. சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பினர், விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணியினர் அத்துடன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னிணியினர் அனைவரும் ஆகக் குறைந்தது 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பான விவகாரத்திலாவது ஒன்றுபட்டு, ஓரணியாக நிற்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

இதேவேளை, வடக்கு, கிழக்கில் தனியான கட்சிகளாக இயங்கிவரும் ஏனைய சிறு கட்சிகள் மத்தியிலும் 13ஆவது தொடர்பில் ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொண்டால் அதுவும் நல்லது. நாம் இவ்வாறு கூறுவதால், தமிழ் மக்களின் அடிப்படையான அரசியல் கோரிக்கைகளை கைவிடுமாறு கூறவில்லை அதேவேளை மனித உரிமைகள் தொடர்பான தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை கைவிடுமாறு கூறவில்லை. இங்கு எதனையும் கைவிட வேண்டியதில்லை. இந்தியாவும் அவ்வாறு கூறவில்லை. ஆனால், தற்போதைய சூழலில், புதுடில்லியிடமிருந்து தமிழர்கள் எதனையாவது எதிர்பார்த்தால் அதன் எல்லைக்கோடு தெளிவானது. அதனைத்தான் இந்தியா தெளிவாகக் கூறிச் சென்றிருக்கின்றது. இருப்பதை பாதுகாப்பதா அல்லது அதனையும் பறிகொடுத்துவிட்டு, வெறும் கற்பனையில் சீவிப்பதா? இதுதான் தமிழர்களுக்கு முன்னாலுள்ள கேள்வி. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம் என்று தமிழில் ஒரு பழமொழியுண்டு.

# வடக்கு - கிழக்கு தமிழ் தரப்புக்கு இந்திய வெளியுறவு செயலரின் உபதேசம்!

**- அலசுவது இராஜதந்திரி -**



*இந்திய வெளியுறவு செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா வடக்கு - கிழக்கின் தமிழ் அரசியல் தரப்புக்கு ஒற்றுமையின் அவசி யத்தை நல்ல சூடாக வழங்கியுள்ளார். “சிலரை சிலகாலம் ஏமாற்றலாம். ஆனால், எல்லோரையும் எல்லா காலத்திலும் ஏமாற்ற முடியாது”, என்று அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஆபிரஹாம் லிங்கன் ஒரு தடவை குறிப்பிட்டிருந்தார்.*

*தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் கள் இந்திய வெளியுறவு செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவை கொழும்பில் நேற்று முன்தினம் சந்தித்திருந்தனர். அச்சமயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூறிய அனைத்தையும் நன்கு செவிமடுத்த இந்திய வெளியுறவு செயலாளர் வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் தரப்பினரின் ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார்.*

*தமிழ் அரசியல் தரப்பினர் மிதவாதிகளாக இருக்கலாம். கடந்த காலங்களில் செயல்பட்ட தீவிரவாதிகளாகவும் இருக்கலாம். இரு தரப்பினருமே ஒருபோதும் ஒற்றுமையாக ஒரே குரலில் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்காக குரல் கொடுத்திருக்கவில்லை.*

*தென்னிலங்கையின் கடும்போக்கு பேரினவாத அரசியல்வாதிகள் வடக்கு - கிழக்கு மக்களுக்கு அரசியல் ரீதியான உரிமைகளை வழங்க மறுத்து வருகின்ற அதேசமயம், வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் தரப்பினர் ஒரே குரலில் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க முன்வந்துள்ளனரா என்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது.*

*இந்தியாவே இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டுவருவதில் முக்கிய பங்காற்றியிருந்தது. இந்திய இராஜதந்திரிகள், இலங்கையின் மூத்த அரசியல்வாதிகள், இராஜதந்திரிகள் ஆகியோரின் உதவி ஒத்தாசையுடனேயே 13ஆவது திருத்தச்சட்டம் இலங்கை அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டிருந்தது.*

*13ஆவது திருத்தச்சட்டம் அறிமுகமான காலப்பகுதியில் இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணங்களின் அடிப்படையில் இந்திய அமைதிப் படையின் அனுசரணையோடு மாகாண சபை ஆட்சிமுறை உறுதியான முறையில் கொண்டுவரப்பட்டிருக்குமேயானால் வடக்கு - கிழக்கில் ஓர் அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கம் சிறந்த முறையில் வலுப்பெற்றிருக்கும்.*

*ஆனால், 1987ஆம் ஆண்டு வடக்கு - கிழக்கு மாகாண சபை முறைமை அறிமுகமானதுமே அதனை இல்லாதொழிக்கும் நடவடிக்கையில் எவ்வித தூரநோக்கற்ற முறையில் தமிழீழ விடுதலைப் புலிகள் குதித்திருந்தனர். அத்துடன், வடக்கு - கிழக்கு மக்களுடனான இந்தியாவின் உறவை வேரறுக்கும் விதத்திலும் இந்தியப் படையினருடனான தமிழீழ விடுதலைப் புலிகளின் யுத்தம் விளங்கியிருந்தது.*

*இதைவிட மிக மோசமான முறையில் மேலும் அதிகபட்சமாக தமிழீழ விடுதலைப் புலிகள் 13ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டுவருவதில் இந்தியாவின் பங்களிப்பை வழங்கிய அன்றைய இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியையும் கொலை செய்திருந்தனர்.*

*எனவே, இந்தியாவை ஒரு நல்ல துணையாக பயன்படுத்தி வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அவ்வாறின்றி 13ஆவது திருத்தச் சட்ட அமுலாக்கம் தொடர்பாக இந்தியாவை அன்று பகைத்த பின்னர் தற்போது இந்தியாவிடம் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுலாக்க மண்டியிடுவது தமிழ் தரப்பின் ‘கோமாளி’த்தனத்தையே எடுத்துக்காட்டியுள்ளது.*

*இத்தருணத்திலேயே இந்திய வெளியுறவு செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் தரப்பை நன்கு ‘நாடிபிடித்தறிந்த’ நிலையில் அவற்றுக்கிடையேயான ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.*

*தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிப்பார்வைக்கு நான்கு தமிழ் கட்சிகள் சேர்ந்த ஒரு பலமான அரசியல் அமைப்பாக தென்படலாம். ஆனால்,ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்.) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய நிலையில் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளும் தளம்பலான போக்கிலிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.*

*வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் தரப்போடு மிக நெருக்கமான தொடர்புகளை வைத்துள்ள இந்தியாவே ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தியுள்ள நிலையில், தமிழ் தரப்பை சந்திக்கும் ஏனைய நாடுகள் சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகளும் இந்திய வெளியுறவு செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா கூறியுள்ளமையையே கவனத்தில் கொள்வர் என்பதையே அறிய முடிகின்றது.*

*இந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தம்மைத் தாமே பலப்படுத்திக்கொண்டு வடக்கு - கிழக்கு மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்ற ஒற்றுமையாக முன்வர வேண்டுமென்ற செய்தியையே இந்திய வெளியுறவு செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா இடித்துரைத்துள்ளமையை அறிய முடிகின்றது.* •

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
உழைப்பு, முயற்சிக்கேற்ற பலன் மட்டுமே கிடைக்கும். சமீபத்தில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். மனதில் மகிழ்ச்சி கூடும். உறவினருடன் ஏற்பட்ட பிரச்னைகளை இதமாகப் பேசி தீர்ப்பீர்கள்.

**இடபம்**
பணியாளர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சகோதர, சகோதரிகளின் ஆதரவு மெல்ல அதிகரிக்கும். சகோதரர்களின் ஒத்துழைப்பால் முன்னேற்றம் கூடும்.

**மிதுனம்**
நீங்கள் செய்யும் பஞ்சாயத்துக்கள் நல்ல பலன் தரும். விலகிச் சென்ற உறவினர்கள் உங்களைப் புரிந்துகொள்வர். வழக்கமான பணிகளில் ஏற்பட்ட சுணக்கங்கள் அகலும்.

**கடகம்**
கொடுக்கல், வாங்கலில் இருந்த பிரச்னைகள் அகலும். திட்டமிடாது செய்யும் செயல்களில்கூட வெற்றி கிடைக்கும். பெற்றோர் நோய் பாதிப்பில் இருந்து நிவாரணம் பெறுவார்கள்.

**சிம்மம்**
வீடு, நிலம் வாங்கும் யோகம் உண்டு. முன்பு இருந்த தாமதம் அகலும். விரயத்திற்கு ஏற்ற தொகை வந்துவிடும். தொழிலில் லாபம் உண்டு. பரப்பான நிகழ்வுகள் இடம்பெறும்.

**கன்னி**
பணியாளர்களுக்கு ஊதிய உயர்வும், சலுகைகளும் கிடைக்கலாம். எதிர்பாராத திடீர் நன்மைகளைக் காண்பீர்கள். நிம்மதியான நாள். உயர் அதிகாரிகளின் நன்மை தடையின்றி கிடைக்கும்.

**துலாம்**
பணத்தேவை ஒன்று இன்றைக்கு நல்லபடியாக பூர்த்தியாகும். நிதி நிலைமை சிறப்பாக இருக்கும். முயற்சியில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தினரிடையே அன்பும், ஆதரவும் பெருகும்.

**விருட்சிகம்**
குழந்தைகளுக்கு வேலைவாய்ப்பு, திருமண வாய்ப்பு. தாய்வழி ஆதரவு திருப்தி தரும். நீங்கள் கேட்ட சலுகை கிடைக்கும். அரசாங் கத்தின் மூலம் எதிர்பார்த்து கொண்டிருந்த நன்மை கிடைக்கும்.

**தனுசு**
பொறுமை கூடும். பணிபுரியும் பெண்களுக்கு யோகமான நாள். நிதானப்போக்கு மாறி நன்மைகள் விரைவாகக் கிடைக்கும். முன்னேற்றப் பாதையில் சில இடையூறு வந்தாலும் நீங்கும்.

**மகரம்**
தந்தை வழி உறவில் இருந்து வந்த மனவருத்தம் நீங்கும். புதியவர்களை நம்பி ரிஸ்க்கில் ஈடுபட வேண்டாம். பணியிடத்தில் பதவி மாற்றம், இட மாற்றம் வரலாம்.

**கும்பம்**
சிலருக்கு பணி பற்றிய ஏமாற்றம் வந்து உடனே சரியாகும். திருப்தியளிக்காத விஷயம் பற்றி பொறுமையோடு செயல்படுங்கள். குடும்ப முன்னேற்றம் ஏற்படும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மீனம்**
கொடுக்கல், வாங்கலில் இருந்து வந்த மந்த நிலை நீங்கும். முயன்ற விஷயங்கள் முன்பை விட துரிதமாக நடைபெறும். குழந்தைகளால் பெருமிதம் ஏற்படும். பணியிடப் பிரச்னைகள் அகலும்.

# தேர்தலை நியாயமாக நடத்தாவிட்டால் அதிகாரிகள்மீது வழக்கு தொடுப்போம்

## அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் எச்சரிக்கை

சென்னை, ஒக். 06

உள்ளாட்சித் தேர்தலை நியாயமாக நடத்தாவிட்டால், மாநிலத் தேர்தல் ஆணையம், தேர்தல் அதிகாரிகள் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்படும் என அதிமுக முன்னாள் அமைச்சர் சி.வி. சண்முகம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் ஒன்றியத்தில் அதிமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து முன்னாள் அமைச்சர் சி. வி. சண்முகம் பிரசாரம் செய்தார். இதை அடுத்து செய்தியாளர்களைச் சந்தித்த சி.வி.சண்முகம், "தமிழ்நாட்டில் ஒன்பது மாவட்டங்களுக்கான உள்ளாட்சித் தேர்தலை நேர்மையாகவும், நியாயமாகவும், சுதந்திரமாகவும் நடத்த வேண்டும் என்ற நோக்கில் அ.தி.மு.க. கழகத்தின் இணை ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் முதல்வருமான எடப்பாடி பழனிசாமி தேர்தல் ஆணையத்துக்குச் சில கோரிக்கைகளை மனுவாக அளித்தார்.



இதற்கு மாநிலத் தேர்தல் ஆணையம் சார்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனு மீது உயர் நீதிமன்றம் சில உத்தரவுகளைப் பிறப்பித்தது. தேர்தலை நியாயமாக சுதந்திரமாக நடத்த அனைத்துப் பகுதிகளிலும் வாக்கு எண்ணி முடிகிற வரை சி.சி.ரீ.வி. கேமராக்கள் பொருத்தப்பட்டு வாக்கு எண்ணிக்கைகள் பதிவு செய்யப்பட வேண்டும். அவை பாதுகாக்கப்பட வேண்டும் உள்ளிட்ட உத்தரவுகளை உயர் நீதிமன்றம் வழங்கியுள்ளது.

தேர்தலை நியாயமாக நடத்தவில்லையென்றால், தேர்தல் ஆணையம், மாவட்டத் தேர்தல் அதிகாரி, உதவித் தேர்தல் அலுவலர் என யார் எல்லாம் தவறு செய்கிறார்களோ, அவர்கள் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்படும். இதுவே இறுதி எச்சரிக்கை" என்று கூறினார்.

# உள்ளூராட்சி தேர்தல் வாக்களிப்பு இன்று

சென்னை, ஒக். 06

தமிழகத்தில், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் நடைபெறும் ஊரக உள்ளாட்சி தேர்தலில் முதல் கட்ட வாக்குப் பதிவுக்கான பிரசாரம் நேற்று முன்தினம் மாலையுடன் முடிவுக்கு வந்துள்ளது. இன்று புதன் கிழமை வாக்களிப்பு நடைபெறவுள்ளது.

விழுப்புரம், கள்ளக்குறிச்சி உள்ளிட்ட 9 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சி தேர்தல் இன்று புதன்கிழமை மற்றும் 9-ஆம் திகதிகளில் 2 கட்டங்களாக நடைபெறுகின்றது.

இத்தேர்தலை பொறுத்தவரை மாவட்ட ஊராட்சி உறுப்பினர், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் பதவியிடங்களுக்கான தேர்தல் அரசியல் கட்சி அடிப்படையிலும், கிராம ஊராட்சி தலைவர், கிராம ஊராட்சி உறுப்பினர் பதவியிடங்களுக்கான தேர்தல் கட்சி அடிப்படையில் இல்லாமலும் நடக்கிறது.

இதில் விழுப்புரம் மாவட்டத்தை பொறுத்தவரை முதல் கட்டமாக செஞ்சி, கண்டமங்கலம், முகையூர், ஒலக்கூர், திருவெண்ணெய்நல்லூர், வானூர், விக்கிரவாண்டி ஆகிய 7 ஒன்றியங்களிலும், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் முதல்கட்டமாக உளுந்தூர்பேட்டை, திருநாவலூர், திருக்கோவிலூர், ரிஷிவந்தியம் ஆகிய 4 ஒன்றியங்களிலும் தேர்தல் நடைபெறுகிறது.

இத்தேர்தலில் பெரும்பான்மையான இடங்களை கைப்பற்றி உள்ளாட்சியில் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என தி.மு.க.- அ.தி.மு.க.வினர் தேர்தல் களத்தில் இறங்கியுள்ளனர். இதேபோல் பா.ஜ.க., பா.ம.க., காங்கிரஸ், தே.மு.தி.க., அ.ம.மு.க., கம்யூனிஸ்டு கட்சிகள், விடுதலை சிறுத்தைகள் கட்சி, பகுஜன் சமாஜ் கட்சி உள்ளிட்ட கட்சிகளின் வேட்பாளர்கள் மற்றும் சுயேட்சை வேட்பாளர்களும் தாங்கள் வெற்றி பெற்றால் மக்களுக்கு தேவையான அடிப்படை பிரச்னைகளை நிறைவேற்றித்தர பாடுபடுவோம் என்று கூறி மக்களிடம் கடந்த 10 நாட்களாக தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் முதல் கட்ட தேர்தலுக்கான அனல் பறக்கும் இறுதிகட்ட பிரசாரம் நேற்று முன்தினம் மாலை 5 மணியுடன் ஓய்ந்தது. இங்கு இன்று தேர்தல் நடைபெறுகின்றது.

# நடிகர் அஜித்குமாரின் வீட்டின் முன்பாக தீக்குளிக்க முயன்ற பெண்ணால் பரபரப்பு

சென்னை, ஒக். 06

ஈஞ்சம்பாக்கத்தில் உள்ள நடிகர் அஜித்குமாரின் வீட்டு முன் பெண் தீக்குளிக்க முயன்றதால் நேற்று முன்தினம் பரபரப்பு ஏற்பட்டது.

நடிகர் அஜித்குமார், தனது மனைவி ஷாலினியுடன் கடந்த சில மாதங்களுக்கு முன்பு சென்னை தேனாம்பேட்டையில் உள்ள தனியார் ஆஸ்பத்திரிக்கு வந்தார். அப்போது அந்த ஆஸ்பத்திரியில் பணியாற்றிய பெண் ஊழியர் பர்சானா தனது கைத்தொலைபேசியில் அஜித்குமாரை காணொலி எடுத்தார். அந்த காணொலி சமூக வலைதளங்களில் வைரலாக பரவியது.

ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக வருபவர்களுடன் புகைப்படம் எடுப்பதும், அதை வலைதளங்களில் பரப்புவதும் தவறு என பர்சானாவிடம் ஆஸ்பத்திரி பாதுகாப்பு அதிகாரிகள் எடுத்து கூறினர். ஆனால், அஜித்குமார், ஆஸ்பத்திரிக்கு வந்து செல்லும் காணொலி சமூக வலைதளங்களில் பரவியதால் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இதனால் ஆஸ்பத்திரி நிர்வாகம், பர்சானாவை பணியிடை நீக்கம் செய்தது. இதை கேள்விப் பட்ட அஜித்குமாரின் மனைவி ஷாலினி, ஆஸ்பத்திரி நிர்வாகத் திடம் பரிந்துரை செய்ததால் பர்சானா மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டதாக கவும், ஆனால் சிறிது நாட்களிலேயே மீண்டும் பர்சானா பணி நீக்கம் செய்யப்பட்டதா கவும் கூறப்படுகிறது.



இதனால் கொரோனா ஊரடங்கின்போது போதிய வருமானம் இன்றி குடும்பத்தை நடத்த முடியாத சூழ்நிலையால் பரிதவித்த பர்சானா, அஜித்குமாரின் மேலாளரை சந்தித்து தனக்கு மீண்டும் ஆஸ்பத்திரியில் வேலை கிடைக்க அஜித்குமாரிடம் பேசி உதவுமாறு கேட்கும் ஒலிப்பதிவு ஒன்று சமூகவலைதளங்களில் பரவி பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை பர்சானா, சென்னையை அடுத்த ஈஞ்சம்பாக்கத்தில் உள்ள நடிகர் அஜித்குமாரின் வீட்டு வாசலில் நின்று கொண்டு திடீரென தனது உடலில் மண்எண்ணெய் ஊற்றி தீக்குளிக்க முயன்றார். இருந்தபோதிலும், தீ அணைக்கப்பட்டு குறிப்பிட்ட பெண் காப்பாற்றப்பட்டார்.




# குருநகர் மீனவர்களின் படகை மோதியது இந்திய மீன்பிடி படகு

## மீனவர்கள் மீதும் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஒக். 06

**இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த இந்திய இழுவைமீன்பிடி படகு குருநகர் பகுதி மீன்பிடிப் படகை நேராக மோதி சேதப்படுத்தியது. அத்துடன் படகில் இருந்த குருநகர் மீனவர்களை கடலில் தூக்கிப் போடும் முயற்சியில் இந்திய மீனவர்கள் ஈடுபட்டனர் எனக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.**

குருநகர் பகுதியில் இருந்து மீன்பிடி தொழிலுக்காக ஒரு படகில் மூவர் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் தொழிலுக்குச் சென்ற நிலையில் நேற்று அதிகாலை 3 மணி அளவில் கற்கடதீவு கடல் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அத்துமீறி இலங்கை கடற்பரப்புக்குள் நுழைந்த இந்திய மீன்பிடி ட்ரோலர் குருநகர் மீனவர்களின் மீன்பிடிப் படகை நேராக மோதி சேதப்படுத்தியது. அத்துடன் படகில் இருந்த மூவரையும் தாக்கிக் கடலில் தூக்கிப்போடும் முயற்சியிலும் அவர்கள் ஈடுபட்டனர். குறித்த படகு முழுமையாக சேதம் அடைந்துள்ளதோடு படகில் பயணித்தவர்கள் காயங்களோடு கரை சேர்ந்துள்ளனர்.

எமது கடலில் சுதந்திரமாகச் சென்று மீன்பிடிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. குறிப்பாக அத்துமீறிய இந்திய மீனவர்கள் எமது படகைச் சேதப்படுத்தியதோடு மாத்திரமல்லாது படகில் இருந்த மீனவர்களின் உயிரைக் காப்பாற்றாது கடலுக்குள் தள்ளும் முயற்சியிலும் ஈடுபட்டிருந்த போதிலும் குருநகர் மீனவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பி கரை சேர்ந்துள்ளனர் என குருநகர் மீனவர் சங்கத் தலைவர் தெரிவித்தார். (அ-3)

# இந்திய மீனவர் அத்துமீறலை உடன் கட்டுப்படுத்தவேண்டும்

## குருநகர் மீனவர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 06

இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயல்பாட்டினை நிறுத்துவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென குருநகர் கடற்தொழில் அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் யூலியன் சகாயராஜா தெரிவித்தார்.

இந்திய இழுவைப் படகுகளால் குருநகர் பகுதி மீனவர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்திய இழுவைப் படகுகளின் பிரச்னை தொடர்பில் ஏற்கனவே கடற்தொழில் அமைச்சு மட்டத்தில் முறையிட்டுள்ளோம். இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய வருகை நிறுத்தப்படவேண்டும். இந்த பிரச்னையானது தொடர்ந்தும் இடம்பெற்று வருகிறது.

இந்திய மீனவர்களால் எமது மீனவர்கள் தாக்கப்படும் சம்பவம் நீண்ட நாள்களாக தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. இந்தச் சம்பவமானது நேரடியாக பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கும் படகு உரிமையாளர்களுக்கும் இந்திய அரசினால் நட்டஈடு வழங்குவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்




ஏனென்றால் இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி வருவது ஒருபுறம். அதேபோல மீனவர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவது இன்னொரு புறமாக இருக்கின்றது. இந்த நிலையில் எமது மீனவர்கள் கடலில் சுதந்திரமாக தொழில் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. எனவே இந்திய மீனவர்கள் எமது கடற்பரப்புக்குள் வருவதை தடுத்து நிறுத்த வேண்டும் என ஏற்கனவே கோரிக்கை விடுத்திருக்கின்றோம்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறாமல் இருக்கவேண்டும். எமது மீனவர்கள் பாதுகாப்பான முறையில் தொழில் செய்து கரை திரும்பவேண்டும்.

எனவே இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாட்டை நிறுத்துவதற்குரிய நடவடிக்கையை கடற்தொழில் அமைச்சும் அரசாங்கமும் உடனடியாக மேற்கொள்ளவேண்டும்-என்றார். (அ-3)

# டொலர்கள் நெருக்கடியால் சீனி இறக்குமதியில் சிக்கல்?

கொழும்பு, ஒக். 06



நாட்டில் தற்போது நிலவி வரும் டொலர் நெருக்கடிக்கு மத்தியில் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு சீனி இறக்குமதியை மேற்கொள்வதற்கு அங்குள்ள சீனி வழங்குநர்கள் தயக்கம் காட்டி வருவதாக சீனி இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

டொலர் நெருக்கடி நிலை காரணமாக சீனி இறக்குமதிக்கான ஆவணங்களை ஏற்பதற்கு வணிக வங்கிகள் தயங்குவதாகவும் சீனி இறக்குமதியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சீனி இறக்குமதிக்கான அனுமதியை அரசாங்கம் வழங்கியிருந்தாலும், டொலர் பற்றாக்குறை காரணமாக இறக்குமதியாளர்கள் பெரும் இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளதாகவும் அறியமுடிகிறது.

மேலும், இந்தியாவில் தற்போது சீனி விலை அதிகரித்துள்ளதன் காரணமாக, இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ள கட்டுப்பாட்டு விலையில் சீனியை விற்பனை செய்ய முடியாது எனவும் சீனி இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# பல இடங்களில் திடீர் மின்தடை!

கொழும்பு, ஒக். 06

நாட்டின் பல இடங்களில் திடீரென மின்தடை ஏற்பட்டதாக இலங்கை மின்சார சபை அறிவித்தது.

கண்டி,காலி, கொழும்பின் சில பிரதேசங்கள் உட்பட நாட்டின் ஏராளமான பிரதேசங்களில் இந்த மின்தடை ஏற்பட்டதாக தெரிய வருகிறது.

பலத்த காற்று மற்றும் மழை காரணமாக சில இடங்களில் மின்தடை ஏற்பட்டது.

மின் விநியோகக் கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இலங்கையின் தென் பகுதிக்கான மின் விநியோகம் தடை பட்டதாக இலங்கை மின்சார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் மலையகத்தில் சீரற்ற காலநிலையினால் மின்சாரத்தடை ஏற்படக்கூடும் என்று அடையாளம் காணப்பட்ட பிரதேசங்களுக்கான மின்விநியோகம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

மின்தடையை சரி செய்வதற்கான பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

# யாழ்.மோட்டார் போக்குவரத்து திணைக்கள சேவைகள் தொடர்பில் மக்களுக்கு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 06

நாட்டில் அண்மைக்காலமாக நெருக்கடி கொடுத்து வரும் கோவிட் 19 நிலைமைகளை கருத்தில் கொண்டு யாழ். மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து அலுவலகத்துக்கு சேவைநாடி வரும் பொதுமக்களுக்கு வீண் அலைச்சலைத் தவிர்க்கும் வகையிலும், சன நெரிசலை இயன்ற வகையில் மிகவும் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டு சில அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்தகவல்களை மனதில் நன்கு நிலைநிறுத்தி அதன்வழி நடந்து கோவிட் 19 நெருக்கடியிலும் சிறந்த முறையில் சேவைகளை வழங்க ஒத்துழைப்பு வழங்கியுதவுமாறு யாழ். மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து அலுவலம் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்த அறிவுறுத்தல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

29.09.2021ஆம் திகதிய 17 - 2247ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட இரண்டு வகையான கால நீடிப்பைப்பெற்ற சாரதி அனுமதிப்பத்திரதாரர்கள் சாரதி அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பிப்பது தொடர்பில் அவசரம்காட்ட வேண்டியதில்லை.

01.04.2021 ஆம் திகதிக்கு முந்திய திகதியில் மோட்டார் வாகன சாரதிஅனுமதிப்பத்திரங்கள் முடிவுற்றவர்கள் மற்றும் மோட்டார் வாகன புதிய சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பங்களை மேற்கொண்டு சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான எழுத்துப்பரீட்சைக்குத் திகதியினைப் பெறவிரும்புவோர் அலுவலக நாட்களில் உரிய ஆவணங்களுடன் வருகைதந்து வழங்கப்படும் அடையாள முறைசிட்டையைப் (ரோக்கன்) பெற்றுக்கொள்ளலாம். அவர்கள் பெறும் அடையாள முறைசிட்டைக்கேற்ப (ரோக்கன்) குறித்த சேவைகளை புதன், வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

திங்கள் முதல் வெள்ளி வரையான தினங்களில் மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான செயன்முறைப் பரீட்சைகள் நடைபெறும். மு.ப 10.00 மணிக்கும் பி.ப 3.00 மணிக்கும் எனும் வகையில் இரண்டு பிரிவுகளாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பயிலுநர்கள் அழைக்கப்படுவர்.

மேற்படி சேவைகளுக்கென ஒதுக்கப்பட்ட தினங்களில் பொதுவிடுமுறைகள் வரும்பட்சத்தில் அத்தினங்களில் நடைபெறவிருக்கின்ற சேவைகள் தொடர்ந்துவரும் வாரத்தில் குறித்த சேவைக்கென ஒதுக்கப்பட்ட தினங்களில் நடைபெறும்.

ஏனைய சேவைகளான வாகன உரிமை மாற்ற விண்ணப்பங்களைப் பெறுதல், வாகன இலக்கத்தகடுகள் பெறல், இலக்கத் தகடுகளை விநியோகித்தல், சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கான இணைப்பிரதிபெறுதல், சாரதி அனுமதிப்பத்திர எழுத்துப்பரீட்சை போன்றவை 2021.10.04 தொடக்கம் ஆரம்பமாகும்.

வாகன உடைமை மாற்றம், பதிவுச் சான்றிதழில் மாற்றங்கள் செய்தல், பதிவுச் சான்றிதழ் நகல் மற்றும் வாகன இலக்கத் தகடுகள் பெறுவதற்காக விண்ணப்பித்தல் சம்பந்தமான முற்பதிவுகளுக்கு 070 635 4155 மற்றும் 070 635 4156 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும்.

பொதுமக்கள் மேற்படி விடயங்கள் தொடர்பில் கூடிய கவனத்தைச்செலுத்தி கோவிட் -19 தொடர்பாக மிகவும் அவதானமாக நடந்து, அலுவலக சேவைகள் தொடர்ந்தும் நடைபெறுவதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

மேலும், நடைபெறாத பரீட்சைகள் தொடர்பில் மாற்றம் செய்யப்பட்ட நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி விடயங்கள் தொடர்பில் மேலதிக விவரங்கள் தேவைப்படுவோர் - 021 222 3789 அல்லது - 021 222 7552 ஆகிய தொலைபேசி இலக்கத்துடன் அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 4.00 மணிவரை தொடர்பு கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3)

# எட்டு தமிழ் கைதிகளுக்கும் உரிய பாதுகாப்பு வழங்குக!

## உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவு

**கொழும்பு, ஒக்.06**

**அமைச்சர் லொஹான் ரத்வத்தவால் அச்சுறுத்தப்பட்டதாகக் கூறப்படும் அனுராதபுரம் சிறையில் உள்ள எட்டு தமிழ்க் கைதிகளுக்கும் உரிய பாதுகாப்பு வழங்குமாறு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்துக்கு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.**

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள பூபாலசிங்கம் சூரியபாலன் உள்ளிட்ட 08 தமிழ்க் கைதிகள் சார்பில் உயர்நீதிமன்றத்தில் கடந்த மாதம் 30 ஆம் திகதி அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த 12 ஆம் திகதி மாலை 06 மணிக்கு அனுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்ற இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, தமது தலையில் துப்பாக்கியை வைத்து மேற்கொண்ட மரண அச்சுறுத்தல் காரணமாக தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக அறிவிக்குமாறு இந்த மனுவில் மனுதாரர்கள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அன்று மாலை 6.05 மணியளவில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக்கூண்டிலிருந்து தான் உட்பட கைதிகளை வெளியேற்றி முழந்தாளிடச் செய்து, தலை மீது துப்பாக்கியை வைத்து அச்சுறுத்தியதாக பூபாலசிங்கம் சூரியபாலன் உள்ளிட்ட கைதிகள் சார்பில் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள இந்த கைதிகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு ஜனாதிபதியினால் தமக்கு பூரண அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்து, அச்சுறுத்தல் விடுத்தமையால் தமது உயிருக்கு பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் தம்மை யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்றுமாறும் தமக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில் இருந்து தம்மை விடுவிக்குமாறும் இந்த மனுவில் குறிப்பிடப்பட்டனர்.

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, அனுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகர், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம், நீதிய மைச்சர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த மனு மீதான விசாரணையின்போது 8 கைதிகளுக்கும் பாதுகாப்பு வழங்குமாறு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்துக்கு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இதேவேளை, இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்த ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதியரசர் தலைமை யிலான குழுவொன்றை நீதி அமைச்சர் அலி சப்ரி நியமித் துள்ளார்.

இந்த விசாரணைகள் முடிவடைந்து அறிக்கை சமர்ப்பித்தவுடன் உரிய நடவடிக்கை எடுக் கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




# நேயம் பவுண்டேஷன் உதவி

யாழ்ப்பாணம், ஒக். 05

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் உள்ள நீதிவான் நலன்புரி நிலையத்தில் வாழும் நான்கு கர்ப்பவதிகளும் ஆறு பாலூட்டும் தாய்மாரும் தமக்கு பாலுணவு கிடைப்பதில்லை என்றும் அதனை வழங்கி உதவுமாறும் நேயம் பவுண்டேஷன் நிறுவனத்தினரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதனை அடுத்து நேயம் பவுண்டேஷன் நிறுவனத்தினர் இந்த பத்துப் பேருக்கும் தினமும் ஒரு மாதத்துக்கு அரை லீற்றர் பசுப்பால் வழங்குவதற்குரிய பதினெட்டாயிரம் ரூபாயை பால் சபைக்கு வழங்கியுள்ளனர். இந்த விநியோகம் கிராம சேவையாளரின் மேற்பார்வையில் கடந்த முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

# பஸ் கட்டணம் உயரும்?

கொழும்பு, ஒக். 06

தற்போதைய நிலையில் போக்குவரத்துத் துறையின் அனைத்து செலவுகளையும் கருத்திற் கொண்டு பஸ் கட்டணங்களை அதிகரிப்பதற்கான தொழிற்சங்கப் போராட்டத்தை ஆரம்பிக்க தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் திட்டமிட்டுள்ளது.

இந்தத் தகவலை அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் பிரதான செயலாளர் அஞ்சன பிரியன்ஜித் தெரிவித்துள்ளார்.

டயர், பட்டரி, எரிப்பொருள், ஒயில், மேலதிக பாகங்கள் மற்றும் சேவைக் கட்டணங்கள் வேகமாக உயர்வதால் பஸ் கட்டணத்தை அதிகரிக்க நேரிட்டுள்ளது. தங்கள் கோரிக்கை நாளை உத்தியோகபூர்வமாக அரசாங்கத்திடம் முன்வைக்கப் படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

குறைந்தபட்ச பஸ் கட்டணமான 14 ரூபாயை 25 ரூபாயாக அதிகரிக்க வேண்டியுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

# பூஸ்டர் தடுப்பூசியை வழங்குவதற்கு உலக சுகாதார நிறுவனம் பரிந்துரை

கொழும்பு, ஒக். 06

கொரோனா தொற்று ஒழிப்புக்கான ஊக்கி (Booster Shot) தடுப்பூசியை ஏற்றுவது தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் தனது பரிந்து ரையை வழங்கியுள்ளது.

65 வயதுக்கு மேற்பட்டவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள் மற்றும் சுகாதார தரப்பினர் உள்ளிட்ட முன்னுரிமைப் பட்டியலில் உள்ளவர்களுக்கு ஊக்கி தடுப்பூசியை ஏற்ற, உலக சுகாதார ஸ்தாபனம் இணக்கம் தெரிவித்துள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். அதற்கமைய, ஊக்கி தடுப்பூசியை ஏற்றுவதற்கு தயாராகி வருவதாக சுகாதார அமைச்சர் கூறினார்.

### 4 மாவட்டங்களுக்கு

# மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 06

பலத்த மழையுடன் கூடிய வானிலையால் 4 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட் டுள்ளது.

காலி, களுத்துறை, கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களின் சில பிரதேச செயலர் பிரிவுகளுக்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கையை விடுத்துள்ளது.

# இராசாவின்தோட்ட வீதி நவ.15 வரை மூடப்படும்

யாழ்ப்பாணம்,ஒக். 06

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்ட வீதி எதிர்வரும் நவம்பர் மாதம் 15ஆம் திகதி வரை மூடப்பட்டு இருக்கும் என யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் அறிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்ட வீதி - ஸ்ரான்லி வீதி சந்திக்கு அருகில் , இராசாவின்தோட்ட வீதியின் குறுக்காக வடிகால் கட்டமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளமையால் , குறித்த வீதியின் ஊடான போக்குவரத்து நவம்பர் மாதம் 15ஆம் திகதி வரையில் தடைப்பட்டு இருக்கும்.

அதனால் மாற்று வீதிகளின் ஊடாக போக்குவரத்தினை மேற்கொள்ளுமாறும் , அதனால் ஏற்படும் சிரமங்களை பொறுத்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்-என்றார்.

# நீண்ட புதிய கொரோனா அறிகுறி; சுகாதார அமைச்சு சிறப்பு கவனம்

கொழும்பு, ஒக். 05

புதிய நீண்ட கொரோனா அறிகுறிகள் குறித்து சுகாதார அமைச்சு சிறப்பு கவனம் செலுத்தியுள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக உரிய நிபுணர்களுடன் ஒரு விரிவான கருத்தை கொண் டிருப்பது அவசியம் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தன கூறினார்.

அதன்படி இன்று கூடும் தொழில்நுட்பக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் எடுத்துக் கொள்ளப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

இருப்பினும் கொரோனாவில் இருந்து மீண்ட பின்னர் அசாதாரண அறிகுறிகள் கண்டறியப்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெறுமாறு அவர் மக்களை கேட்டுக்கொண்டார்.

கொரோனா வைரஸ் கண்டறியப்பட்ட 90-180 நாள்களுக்குப் பின்னர் ஒன்பது முக்கிய நீண்ட கொரோனா அறிகுறிகள் ஒரு புதிய ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அண்மையில் ஸ்ரீ ஜெயவர்தன புர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் செல் உயிரியல் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சந்திம ஜீவந்தர கூறினார்.

நீண்ட கொரோனா அறிகுறிகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களுக்கு அடிக்கடி இருந்தன என்றும் மேலும் அவை பெண்களில் சற்று அதிகமாகவே இருந்தன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதற்கமைய, அசாதாரண சுவாசம், வயிற்று அறிகுறிகள், கவலை, மனச்சோர்வு, மார்பு அல்லது தொண்டை வலி, அறிவாற்றல் பிரச்னைகள், சோர்வு, தலைவலி, தசை வலி உள்ளிட்ட ஏனைய வலிகளும் இதில் அடங்குவதாக அவர் குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி கல்லாறில் பொலிஸ் மீது தாக்குதல்!

## ஒருவர் கைதானார்

கிளிநொச்சி, ஒக். 06

கிளிநொச்சி, தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறுப் பகுதியில் பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் அவரிடம் இருந்த இரண்டு வாள்களும் கைப்பற்றப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை குறித்த பகுதியில் வன்முறைச் சம்பவம் இடம்பெறுவதாக பொலிஸாரின் அவசர சேவை இலக்கமான 119 இற்கு பிரதேச மக்களால் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அந்தப் பிரதேசத்துக்கு விசாரணைக் காக சென்ற விசேட பொலிஸ் பிரிவினர் மீது வாள்வெட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலேயே ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அவரிடம் வாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்தில் 4 பொலிஸார் காயமடைந்துள்ளதுடன் இருவர் தர்மபுரம் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதுடன் அதில் ஒருவர் கிளிநொச்சி வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். மேலும் இருவர் சாதாரண காயங்களுடன் சிகிச்சை பெற்று திரும்பியுள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# பருத்தித்துறை இ.போ.ச. ஊழியர்கள் போராட்டம்

வடமராட்சி, ஒக். 06
தனியார் வாகனத்தை செலுத்திக்கொண்டு இ.போ.ச. சாலையில் மாத வருமானம் எடுக்கும் ஊழியர் ஒருவரை அங்கிருந்து அகற்ற வேண்டும் என கூறி இ.போ.சபை பருத்தித் துறை சாலையின் ஊழியர்கள் சிலர் கவனவீர்ப்புப் போராட் டத்தில் ஈடுபட்டனர்.
பருத்தித்துறை சாலையில் கடமை புரியும் அந்த ஊழியர் தனியார் வாகனங்களைச் செலுத்துகிறாரெனவும், ஆனால், பருத்தித்துறை சாலையிலிருந்து மாத வருமானத்தைப் பெற்று வருகிறார் என்றும், அவர் ஊழி யர்களின் நலனையோ, சாலை யின் முன்னேற்றத்திலோ பங்கு கொள்ளாமல் செயல்படுகின் றார் எனவும் குற்றம் சுமத்தியே ஊழியர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
போராட்டம் மேற்கொண் டவர்கள் சுலோக அட்டைகளை யும் தாங்கியிருந்தனர் அத்துடன் அவரை இந்த சாலையைவிட்டு அகற்ற வேண்டும் எனவும் கூறி போராட்டத்தை மேற்கொண் டனர்.

# பாடசாலைகளை திறப்பதற்கு முன்னர் சம்பள பிரச்னையை தீர்க்கவேண்டும்

## அரசிடம் கோருகின்றது ஐ.தே.க.



கொழும்பு, ஒக். 06
**பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கு முன்னர் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பளம் தொடர் பான பிரச்னைகளுக்கு தீர்வை வழங்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.**
தொழிற்சங்கப் பிரதிநிதி களின் குரல்களை மௌனமாக் குவதற்கு பதிலாக அவர்களு டன் கலந்துரையாடவேண்டும் என அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்தார்.
ஐ.தே.க தலைமையிலான அரசாங்கம் ஆசிரியர்களின் பிரச்னைகளைத் தீர்க்கவும் அவர்களின் மாதச் சம்பளத்தை 10,000 ரூபாயால் அதிகரிக்க வும் அர்த்தமுள்ள நடவடிக்கை களை எடுத்ததாக அவர் சுட்டிக்காட்டினார்.
இருப்பினும், தற்போதைய அரசாங்கத்தின் தோல்விய டைந்த கொள்கைகளால் தற் போது, கல்வி, சுகாதாரம் மற்றும் பொருளாதாரம் சரிந்து விட்டதாக ருவான் விஜே வர்தன கூறினார்.
இந்த மாதம் பாடசாலை களை மீண்டும் திறக்கத் தீர்மா னித்துள்ள நிலையில், அரசாங்கம் தொழிற்சங்கத்து டன் கலந்துரையாடி அவர் களின் போராட்டத்தை முடி வுக்கு கொண்டுவரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

# 21 ஆம் திகதி முதல் பாடசாலைகளின் ஆரம்ப பிரிவை திறப்பதற்கு முடிவு

கொழும்பு, ஒக். 06
கற்பித்தல் செயற்பாடுக ளுக்காக 200க்கும் குறைவான மாணவர்களைக் கொண்டுள்ள பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவுகளை மீளத் திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
அதற்கமைய, ஆரம்பப் பிரிவுக்கான கற்றல் நடவடிக்கை எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் ஆரம்பிக்க மாகாண ஆளுநர் கள் தீர்மானித்துள்ளனர்.
நான்கு கட்டங்களாக பாட சாலைகளை மீண்டும் திறக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அதன் முதல் கட்டமாக தரம் 1 முதல் 5 வரை 3,884 பாடசாலை கள் மீண்டும் திறக்கப்படவுள்ளன.

# கொரோனா நோயாளர்களில் சிலருக்கு கடும் மன அழுத்தம்

## ஆலோசனை பெற விசேட இலக்கம்

கொழும்பு, ஒக். 06
கொரோனா தொற்று உறுதி யானவர்களில் சிலருக்கு மன அழுத்தம் ஏற்படக்கூடும் என இலங்கை மருத்துவர் சங்கம் தெரிவித்துள்ளது.
குறிப்பாக சந்தோசமின்மை, அதிகரித்த கோபம், உணவின் மீதான நாட்டமின்மை, நித்தி ரையின்மை போன்ற பிரச்னை கள் ஏற்படக்கூடும் என அந்தச் சங்கத்தின் மனநல விசேட மருத்துவர் சஜீவன அமரசிங்க தெரிவித்துள்ளார்.
மேலும் இந்த அறிகுறி களானது, நாளடைவில் மன அழுத்தமாக மாறக்கூடும் என அவர் சுட்டிக்காட்டினார்.
இந்தநிலையில், இவ்வாறு மன அழுத்தத்துக்கு உள்ளாகு பவர்கள், 247 மற்றும் 1926 ஆகிய அவசர இலக்கங்களுடன் தொடர்புகொண்டு ஆலோச னைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் கூறினார்.
(அ)

# சுகாதார துறைக்காக பட்ஜெட்டில் பெரும் நிதி

கொழும்பு, ஒக். 06
அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில், சுகா தாரத் துறைக்காக 58 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப் படவுள்ளதாக, சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக் வெல தெரிவித்தார்.
குண்டசாலையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டபோது அவர் இத னைத் தெரிவித்தார்.
அத்துடன், சுகாதாரத் துறைக்காக ஒதுக்கப்படும் பெரும் நிதி இதுவாகும் என அவர் கூறினார்.
அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில், சுகாதாரத்துறைக்காக அதிக தொகை ஒதுக்கப்படவுள்ளது.
வழமையாகப் பாதுகாப்பு மற்றும் கல்வித்துறைகளுக்கும் அதிக தொகை ஒதுக்கப்பட்டு மூன்றாவதாக சுகாதாரத்துறைக் கான நிதி ஒதுக்கப்படும்.
எனினும், இந்த முறை சுகா தாரத்துறைக்கு முன்னுரிமைய ளிக்கப்பட் டுள்ளதாக சுகா தாரத்துறை அமைச்சர் கெஹலிய மேலும் கூறினார்.
(அ)

# வெளிநாட்டவரின் வீஸா அனுமதி காலம் நீடிப்பு

கொழும்பு, ஒக். 06
நாட்டில் தற்போது தங்கியி ருக்கும் வெளிநாட்டவர்களுக் கான சகல விதமான வீஸாக்க ளின் செல்லுபடியாகும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.
அதற்கமைவாக ஒக்ரோபர் 7ஆம் திகதியுடன் முடிவடை யும் சகல விதமான விஸாக் களின் செல்லுபடியாகும் காலம் நவம்பர் 6ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக குடி வரவு - குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.
கொரோனா அச்சுறுத்தல் காரணமாக அலுவலகப் பணி களில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக ளால் விஸா நீடிப்பை பெற்றுக் கொள்ளவதில் எதிர்நோக்கும் இடர்பாடுகளுக்கு தீர்வாக இவ் வாறு வீஸா செல்லுபடியாகும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

# மேலும் 477 பேர் பூரண குணம்

கொழும்பு, ஒக். 06
கொரோனா வைரஸ் தொற் றில் இருந்து மேலும் 477 பேர் பூரணமாக குணமடைந்து நேற்று செவ்வாய்க்கிழமை வீடு களுக்கு திரும்பியுள்ளனரென சுகாதார அமைச்சு தெரிவித் துள்ளது.
இதனையடுத்து, கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்க ளின் எண்ணிக்கை 4 இலட் சத்து 77 ஆயிரத்து 851 ஆக அதிகரித்துள்ளது.
இதேவேளை, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள் ளானவர்களின் எண்ணிக்கை 5 இலட்சத்து 21 ஆயிரத்து 218 ஆக அதிகரித்துள்ளது.
அதேநேரம், கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயி ரிழந்தோரின் எண்ணிக்கை 13 ஆயிரத்து 102 ஆக பதிவாகியுள் ளமை குறிப்பிடத்தக்கது.

# இணையவழி கருத்தமர்வு!

யாழ்ப்பாணம், ஒக். 06
கிளைமத்தோன் யாழ்ப் பாணம் நிகழ்வை முன்னிட்டு "காலநிலை மாற்ற செயல்பாட் டுக்கான டிஜிற்றல் கதைகூறல்" எனும் தலைப்பிலான கருத்த மர்வு இன்று புதன்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெற வுள்ளது.
சூம் செயலி வழியில் இடம் பெறும் இந்த நிகழ்வில் வளவா ளராக பெனிஸ்லஸ் துஷான் பங்கேற்கிறார்.
இந்தக் கருத்தரங்கில் பங் கேற்க விரும்புபவர்கள் 838 5521 4483 என்ற அடையாள எண் மூலம் 867378 என்ற கட வுச் சொல்லை பயன்படுத்தி இணைந்து கொள்ளலாம். (ஐ)

# சதொசவில் பாரதூரமான வெள்ளைப்பூண்டு ஊழல்

## சபையில் கூறினார் பந்துல



கொழும்பு, ஒக். 06
சதொச நிறுவனத்தில் பாரதூரமான வெள்ளைப் பூண்டு ஊழல் ஏற்பட்டுள்ளது என்பதை அரசாங்கம் வெளிப் படையாக ஏற்றுக்கொள்வதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று சபையில் தெரிவித்தார்.
இவ்வாறான ஊழல்கள் முதலும் கடைசியுமான சந்தர்ப் பம் இது இல்லை. இதற்கு முன்னரும் இவ்வாறான ஊழல் கள் இடம்பெற்றுள்ளதாகவும் சுட்டிக்காட்டிய அவர், கடந்த அரசாங்கத்தின் காலப்பகுதியில் லக் சதொசவில் இடம்பெற்ற பாரதூரமான ஊழல்கள் தொடர்பிலான 06 முறைப்பாடு கள் குற்றப்புலனாய்வுத் திணைக் களத்தினால் விசாரணை செய் யப்பட்டு வருவதாகவும் குறிப் பிட்டார்.
இந்த அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்போது சதொச நிறுவனம் 2 ஆயிரம் கோடி ரூபாய் நட்டத்தை சந் தித்திருந்ததாகவும் அவர் தெரி வித்தார்.
நேற்றைய பாராளுமன்ற கூட் டத்தொடரின் வாய்மூல கேள் விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

# ராஜிதவுக்கு எதிரான வழக்கு நவம்பர் 10 இல் விசாரணை!

கொழும்பு, ஒக். 06
முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன உள்ளிட்ட பிரதி வாதிகளுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 10ஆம் திகதி விசார ணைக்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளது.
குறித்த வழக்கு நேற்று முன் தினம் கொழும்பு மேல் நீதி மன்ற நீதிபதி மொகமட் இர்ஸ டீன் முன்னிலையில் விசார ணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.
இந்த வழக்கின் ஏனைய பிரதிவாதிகளாக மீன்பிடித் துறைமுக கூட்டுத்தாபனத்தின் முன்னாள் அதிகாரிகளான உபாலி லியனகே மற்றும் நீல் ரவீந்திர முனசிங்க ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.
2014ஆம் ஆண்டு ஒகஸ்ட் முதலாம் திகதிக்கும் அதே வரு டம் நவம்பர் முதலாம் திகதிக் கும் உட்பட்ட காலகட்டத்தில் மோதறை மீன்பிடி துறை முகத்தை கல்ப் யு.கே.பிரை வேட் லிமிடெட் என்ற நிறுவ னத்துக்கு குறைந்த விலையில் குத்தகைக்கு வழங்குவதற்கு அதி காரிகளைத் தூண்டினார் என் றும் அதன் மூலம் அரசுக்கு நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் மீது குற்றம் சுமத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது.



கூட்டுறவாளர்கள் நுண்நிதிக் கடன்களுக்கு எதிரான போராட்டத்தில்

**“லண்டன் பல்கலைக் கழகம் மற்றும் வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியால் செப்ரெம்பர் 25ம், 26ம் திகதிகளில் நடத்தப்பட்ட தெற்காசிய விவசாய இடையூறுகள் மற்றும் அரசியல் விடுதலை எனும் இணையவழியிலான மாநாட்டில் திருமதி. வேதவல்லி செல்வரட்ணம் (முன்னாள் யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுசபை செயலாளர்) வழங்கிய உரை கட்டுரையாக்கப்பட்டுள்ளது. இவர் கடந்த 40 வருடங்களாக கூட்டுறவுத்துறையில் பணியாற்றியுள்ளார். தற்போது ஓய்வுபெற்ற பின்னரும் கூட்டுறவை வளர்ப்பதற்கான தனது முயற்சிகளை முன்னெடுத்துக்கொண்டிருக்கிறார்.**

# விவசாய மேம்பாடும் ஜனநாயக வழிமுறையும்

## ஒரு கூட்டுறவாளரின் பார்வை

**திருமதி. வேதவல்லி செல்வரட்ணம்**

எமது நாட்டின் கிராமிய பொருளாதார அபிவிருத்தியை பார்க்கின்ற போது எல்லா காலத்திலும் வாய்ப்பை உருவாக்கி கொடுத்ததில் விவசாயம் முக்கிய இடத்தை பெறுகின்றது. இலங்கை போன்ற விவசாய நாட்டில் மக்களுடைய விவசாய அல்லது மக்களுடைய உற்பத்தி சார்ந்த வளர்ச்சிக்கும் விருத்திக்கும் இன்றியமையாத ஒன்றாக கூட்டுறவுத்துறை காணப்படுகின்றது. இதனால் தான் 1940களில் விவசாய விளைபொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக் கப்பட்டது. அது வேகமாக வளர்ச்சிய டைந்து 1958களில் கிட்டத்தட்ட 2000வரையான விவசாய உற்பத்தி கூட்டுறவு சங்கங்களாகி விவசாயிகளி னுடைய வாழ்வாதார தேவைகளுக்கு இன்றியமையாத ஒரு அமைப்பாக இருந்தன. அதே போல கிராமிய மக்களுக்கு கடன்களை வழங்குவதற்காக சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் வளர்ச்சி பெற்றன.

கூட்டுறவாளர்களாலும் கூட்டுறவுத்துறையை விரைவாக வளர்க்க கூடிய சூழல் அப்போது இருந்தது. இதனால் வட மாகாணத்தை பொறுத்த வரையில் விவசாய விளைபொருள் உற்பத்தி சங்கங்கள், சமாசங்கள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் மிகப்பிரமாண்டமாக வளர்ச்சியடைந்து அப்போதய கிராமிய பொருளாதாரத்தில் பெரியளவிலான தாக்கத்தை செலுத்தி வந்தது. அதன்பின்னர் அரசாங்கத்தின் பொருளாதார கொள்கை மாற்றம், உலகமயமாதல் அல்லது புதிய பொருளாதார அணுகுமுறைக்குள் எமது நாடு சென்றமை மற்றும் காலத்திற்கு காலம் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் பொருத்தமற்ற பொருளாதார கொள்கைகளை நடைமுறையில் கொண்டு வந்தமை போன்ற காரணங்களினாலும் அதைத் தொடர்ந்து இடம்பெற்ற போர் சூழலாலும் இலங்கை கூட்டுறவு இயக்கம் குறிப்பாக வட மாகாண கூட்டுறவு இயக்கம் பல பாதிப்புக்களை சந்தித்திருக்கின்றது.

இன்றைய நிலையிலும்கூட எங்களுடைய மக்கள் கடந்த மூன்று தசாப்த கால யுத்தத்தினுடைய பாதிப்பிலிருந்து மீளுவதற்கான வாய்ப்புக்கள் என்று நாங்கள் தேடிப்பார்க்கும் போது அதற்கு கூட்டுறவு ஒன்றுதான் மிகப்பொருத்தமான அமைப்பாக காணப்படுகின்றது. காரணம் அந்த பிரதேச மக்களாலயே அவை நிர்வகிக்கப்பட்டு தங்களுடைய தேவைகளை தாங்களே இனம் கண்டு தங்களுடைய பொருளாதார தேவை களை சுயமாக நிர்வகித்து கொள்ளக் கூடிய ஒரு ஜனநாயக அமைப்பாக இந்த கூட்டுறவு காணப்படுகின்றது. எங்களு டைய நாட்டை பொறுத்த வரையில் ஜனநாயகத்தை பயிலும் ஒரு பாட சாலையாக கூட்டுறவு இயக்கம் இருக்கின்றது. அத்துடன் நான் அல்லது தனி மனிதன் என்ற எண்ணக்கருவிற்கு அப்பால் கிராமம் அல்லது கிராம மக்கள் ஒன்றிணைந்து செயற்படவும் இந்த கூட்டுறவு இயக்கம் வாய்ப்பளிக்கிறது.

### கிராமப்புற பொருளாதாரமும் நிலமும்

சூழலில் கிராமிய பொருளாதாரம் என்று நாங்கள் பார்க்கின்ற போது அதிகளவில் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பை நம்பி இருக்கின்ற குடும்பங்கள் பல பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றன. ஆனால், இந்த இரண்டு விடயங்களிலும் கடந்த முப்பது ஆண்டுகால யுத்தத்தின் பின்னர் எங்களுடைய மக்களுக்கும் கூட்டுறவு கலாசாரத்திற்கும் இடையே இடைவெளி காணப்படுகின்றது. அதாவது இளம் தலைமுறையினர் இந்த கூட்டுறவு விழுமியங்களை உணர்வு பூர்வமாக விளங்கிக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் அல்லது புரிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பு குறைந்து காணப்படுகின்றமையால் கூட்டுறவினூடாக மக்களுக்கு கிடைக்க கூடிய முழு வாய்ப்புக்களையும் பெற்றுக் கொடுக்க முடியாத ஒரு நிலை காணப்படுகிறது. இக் கூட்டுறவு கலாச்சார இடைவெளியை மீள் நிரப்ப வேண்டிய தேவை எமக்கு காணப்படுகின்றது.

அத்துடன் விவசாயத்தை பார்க்கும் போது அரசாங்கத்தினுடைய கொள்கைகளும் எமக்கு ஆதரவாக இருக்கவேண்டும். காலத்திற்கு காலம் அரசாங்கங்கள் தங்களுடைய அரசியலுக்கு ஏற்ற வகையில் பொருளாதார கொள்கைகளையும், வாய்ப்புக்களையும் முதலாளிகளையும் தனவந்தர்களையும் வளர்த்து கொள்வதற்கு பயன்படுத்துவத்கு அப்பால் கிராமிய மக்களை வளர்த்து எடுக்க கூடிய கொள்கைகளை அமுல்படுத்த வேண்டும். அதற்கு கொருத்தமான அரசியல் தலைமைத்துவம் எமக்கு தேவைப்படுகின்றது.

அத்துடன் எங்களுடைய விவசாய நிலங்கள் அரசியல் ரீதியாக அபகரிக் கப்பட்ட நிலையில் பல விவசாய நிலங்கள் இன்று விளைவிக்க முடியாத நிலையிலும் காணப்படுகின்றன. எங்களுடைய நிலத்தடி நீர் மாசடைந்து பாதிப்பை உருவாக்குகின்ற ஒரு நிலைக்கு நாங்கள் வந்துள்ளோம். பாரம்பரியமாக


யாழ் மாவட்டக் கூட்டுறவுசபையின் செயலாளராக இருந்த பொழுது

இயந்திரங்களின் ஊடாக நீர் இறைக்கின்ற முறைகள் நவீன விசிறு அல்லது சொட்டு நீர்ப்பாசனங்கள் போன்ற முறைகளை விட மிகப்பாரிய அளவில் நிலத்தடி நீரை பாதிக்கின்றன. அதே போன்று எங்களுடைய விவசாயிகளினால் பயன்படுத்தப்படுகின்ற அசேதன பசளைகள், கிருமி நாசினிகள் போன்றவற்றினுடைய அதீத பாவனை போன்றவற்றாலும் விவசாய நிலங்கள் உயிர்ப்பற்று காணப்படுகின்றன.

ஆகவே இதுபோன்ற பழக்கப்படுத்தப்பட்ட மண்ணுக்கு பாதிப்பை ஏற்படுத்த கூடிய விவசாய முறையில் இருந்து விவசாயிகளை விடுவிப்பதற்கும் இந்த கூட்டுறவு அணுகுமுறை அவசியமானதாக காணப்படுகின்றது. அதே நேரத்தில் விவசாயம் செய்வதற்கான முதலீடுகள், மூலதன பற்றாக்குறை காணப்படுகின்றது. கூலிக்கான செலவுகள், உள்ளீடுகளுக்கான செலவுகள் அதிகரித்தும் விளைச்சல்கள் குறைவாக கிடைக்கின்றன. இதனாலேயே விவசாயிகளுக்கு உற்பத்திசெலவுகள் அதிகரிக்கின்றது. இதற்கு மேலாக இந்த விவசாய உற்பத்திகளை விற்பனை செய்யும் போதும் முதலாளித்துவ கொள்கைகளை எதிர்த்து சந்தைப்படுத்துவதிலும் பல சிரமங்களை எதிர்கொள்கிறார்கள்.

### கூட்டுறவு இயக்கத்தை மீள்கட்டமைத்தல்

குறிப்பாக விவசாயிகளினுடைய உழைப்பு மறைமுகமாக முதலாளித்துவத்தினால் உறிஞ்சப்பட்டு கொண்டு இருக்கின்றது. இந்த நிலையில் அவற்றை சீர் செய்து நவீன காலத்தில் பின்பற்றப் படுகின்ற புதிய விஞ்ஞான முறைகளை உட்புகுத்தி விவசாயிகளுக்கு தேவை யான முதலீடுகளை குறைந்த வட்டியில் அல்லது உள்ளீடுகளை நியாய விலையிலும் அல்லது உள்ளீகளை வழங்கியும் சந்தைப்படுத்தலுக்கான களஞ்சியவசதி அதனுடைய தரப்படுத்தல் அதனுடைய பெறுமதியை அதிகரித்தல் போன்ற பல முயற்சிகளை கூட்டுறவு செய்ய வேண்டிய தேவை காணப்படுகின்றது.

வேகமாக உருவாக்கி கொண்டு வருகின்ற உலக மாற்றங்களை கூட்டுறவுத் துறை உள்வாங்க வேண்டிய தேவை இருக்கின்ற காரணத்தினாலும் அந்த நவீன முறைகளை தேவைப்படுகின்ற இடங்களில் உற்பத்தியிலோ சந்தைப் படுத்தலிலோ பயன்படுத்தவும் அதே போன்று விவசாயத்திற்கு தேவையான விசேட ஆலோசணைகளை நிபுணத்துவ ஆலோசணைகளை நாங்கள் பாரிய அளவில் எங்களுடைய விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுப்பது அவசியமானதாக காணப்படுகின்றது. இவற்றை மிகவும் நல்ல தலைமைத்துவங்களின் ஊடாக வளர்ப்பதன் ஊடாக எதிர்காலத்திலே எங்களுடைய கிராமிய பொருளாதார அபிவிருத்தியில் கூட்டுறவு ஒரு வலுவான தாக்கத்தினை செலுத்த முடியும்.

ஏங்களுடைய பிரதேசத்திலே இந்த கூட்டுறவு தொடர்பான அனுபவமிக்கவர்கள் இருக்கின்றார்கள். அதே நேரத்திலே இளந்தலைமுறையினருக்கு இருக்க கூடிய அந்த கூட்டுறவு தொடர்பான அபிலாசைகள் அல்லது விருப்பை ஏற்படுத்த வேண்டியதும் அதன் மீது பற்று ஏற்படுத்த வேண்டியதும் மீண்டும் கூட்டுறவு மீதான நம்பிக்கையை கட்டி யெழுப்புவதற்கான வாய்ப்பை உருவாக்க வேண்டியதும் இன்றைய தலைவர்களுடைய பொறுப்பாக காணப்படுகின்றது.

குறிப்பாக எங்களுடைய பிரதேசங்களை பொறுத்த வரை அரசியல் ஆதரவு இல்லாமல் கூட்டுறவை முற்று முழுதாக வளர்க்கலாம் என்று கூறமுடியாது. எங்களுடைய பிரதேசத்திலே அரசியல் ரீதியாக மாகாண அரசுகள் உருவாக்கப் பட்டன. ஆனால் மாகாண சபைகள் உருவாக்கப்பட்ட போதிலும் அவை இந்த கிராமிய பொருளாதார அபிவிருத்தியில் போதுமான கவனம் செலுத்தியதாகவில்லை காரணம் அடிமட்டத்திலிருந்து உருவாக்கப்பட்ட தலைவர்கள் அங்கு இல்லாமை ஒரு காரணமாக உள்ளது. இன்று எங்களுடைய அரசியல் ரீதியாக உருவாக்கப்பட்டிருக்கும் பிரதேச சபைகளாக இருக்கலாம். மாகாணசபைகளாக இருக்கலாம் இல்லை மத்திய அரசினுடைய பாராளு மன்ற உறுப்பினர்களாக இருக்கலாம் கிராமிய மட்டத்தில் இருந்து மக்களுடைய துன்பங்களை தீர்க்க கூடிய வர்கள் இதிலே அக்கறை கொண்டு இந்த கூட்டுறவை வளர்க்க முன்வர வேண்டும். ■


யாழ் மாவட்ட கூட்டுறவுசபையால் வீரசிங்கம் மண்டபத்தில் ஓழுங்கமைக்கப்பட்ட கூட்டுறவு கலந்துரையாடல்



# சர்வதேச ஆசிரியர் தினமும் ஆசிரியர் தொழில் திருப்தியும்

ப.இராஜேஸ்வரன்

மனிதவள உருவாக்கத்திற்கு கல்விச் செயன்முறை அடிப்படையாக அமைகின்றது. கல்விச் செயன்முறையின் தரம், வினைத்திறன், விளைதிறன், பயனுறுதித் தன்மை மற்றும் செயலாற்றுகை உயர்மட்டத்தில் அமைவதற்கு ஆசிரியர்களின் செயலாற்றுகை முக்கியமாகின்றது. ஆசிரியர்களின் செயலாற்றுகை வினைத்திறன்மிக்கதாக அமைகின்ற போது கல்விச் செயன்முறையினூடான வெளியீடுகளும், கல்வியின் தொலைநோக்குகளும், பாடசாலைகளின் அடைவுகளும் ஆரோக்கியமானதாக அமையும்.

இத்தகைய பின்னணியில் ஆசிரியர்களின் செயலாற்றுகைக்கான அடிப்படைத்தளம் ஆசிரியர்களின் தொழில்சார் திருப்தி நிலைமையுடன் நெருங்கிய தொடர்புடையதாக வும், தீர்மானிக்கும் முக்கிய சக்தியாக விளங்குகின்றது. ஆசிரியர்களின் தொழில் திருப்தியை தீர்மானிப்பதில் பல்வேறு உள்ளக, புறவாரியான காரணிகள் நேராகவும், மறையாகவும் செல்வாக்குச் செலுத்துகின்றன. இக்காரணிகளின் தாக்கம் காரணமாக ஆசிரியர்களிடம் திருப்தியான அதேவேளை திருப்த்தியற்ற நிலைமைகள் உருவாகின்றன. கல்வியின் தரம் ஆசிரியர்களின் செயலாற்றுகையில் தங்கியுள்ளது. ஆசிரியர்களின் செயலாற்றுகைக்கு ஆசிரியர்களின் தொழில் திருப்தி அடிப்படையாக அமைகின்றது.

இன்று உலகலாவிய ரீதியில் ஆசிரியர் தினத்தை கொண்டாடுகின்ற அதேவேளை எமது நாட்டில் ஆசிரியர்களின் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற பின்னணியில் ஆசிரியர்களின் தொழில் திருப்தி தொடர்பில் அரசாங்கம், கல்விமுகாமைத்துவம் மற் றும் சமூகம் ஆசிரியர் தினத்தில் சிந்திப்பது அவசியமாகின்றது.

கல்வியானது தனியாள் மற்றம் தேசிய அபிவிருத்தியை தூண்டும் பிரதான காரணியாக விளங்குகின்றது. ஒரு பிள்ளையின் தனிப்பட்ட ஆளுமையையும் ஆற்றல்களையும் விருத்தி செய்யவும், சமூக மாற்றங்களுக்கு ஏற்ப வாழ்வதற்கான திறன்தகவுகளை வழங்குவது.இத்தகைய கல்வியை வழங்குகின்ற முகவராகவும், வளவாளராகவும் ஆசிரியர் மற்றும் ஆசிரியசேவை காணப்படுகின்றது. ஆசிரியர்கள் என்போர் ஆசிரியசேவையுடன் இணைந்த ஆளணியினரைக் குறிக்கும். ஆசிரியர்கள் பாடசாலையின் பிரதான வளமாகவும், கல்வியின் தரத்தை தீர்மானிக்கும் வளமாகவும் விளங்குகின்றார்கள். கல்வியின் தேசியக் கொள்கைகளையும் கல்வியின் தேசியக் குறிக்கோள்களையும் பாடசாலைகளின் தொலைநோக்குகளையும் பாடசாலை மட்ட கலைத் திட்டம் ஊடாக வெற்றிகரமாக அமுல்ப்படுத்துவதில் ஆசிரியர்களின் செயலாற்றுகை முக்கிய பங்கு வகிக்கின்றது.

“திருப்தியுடன் கூடிய ஆசிரியர் குழாத்தை உருவாக்கல். ஆசிரியர்களுக்கு இடையில் ஒரு கௌரவமான தொழில் உணர்ச்சியை கட்டியெழுப்புதல் விருப்புடனான ஓர் ஆசிரிய சேவையை வளரச்செய்து தங்கள் கடமைகளை திறம்படச் செய்யவும், ஆசிரியர்கள் வகுப்பறை உள்ளேயும் வெளியேயும் பயன்கள்பெற உதவுதல். பயனுள்ள திறமைகளை தமக்குள் விருத்தி செய்து நல்ல பேறுகளை பெற ஆசிரியர்களை தூண்டுதல், ஆசிரியர்களை நியமனம் செய்தல், பதவி உயர்வு வழங்கல், பயிற்சி மற்றும் அபிவிருத்தி விதிகள் ஆகிய குறிப்புக்கள் ஆசிரியர் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்துடன் ஆசிரியர்கள் இடமாற்றம் செய்வது தொடர்பான நடைமுறைகள் விதிமுறைகள், அதிகாரங்கள், மற்றும் நியாயம் கோரல் தொடர்பான நடைமுறைகள் தேசிய ஆசிரியர் இடமாற்றக்கொள்ளை ஊடாக முன்வைக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்களின் சிறப்பை சமூக மட்டத்தில் உணர்த்துகின்ற அதேவேளை அனைத்து மட்டங்களிலும் கவனத்தை ஏற்படுத்துகின்ற உணர்வு ரீதியான தினமாக ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. இம்முற யுனெஸ்கோ அமைப்பினால் “Teachers at the heart of education recovery” என ஆசிரியர்களின் முதன்மைத் தன்மையை வெளிப்படுத்துகின்ற கருப்பொருள் வெளியப்பட்டுள்ளது. இதன் ஊடாக ஆசிரியர்கள் - ஆசிரியர்களின் சேவையின் உயர்தன்மை வலியுறுத்தப்படுகின்றது எனலாம்.

இலங்கையின் ஆசிரியவள முகாமையில் சர்வதேச ரீதியானதும் முன்மாதிரியானதும், ஆசிரியர்களின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கான வேலை நிலைமைகளை விருத்தி செய்தல், அடைவுகளை வலுவூட்டடல், மேற்பார்வை செய்தல், உதவியளித்தல், கவர்தல், வலுவூட்டல், அடைவை கணிப்பிடல் போன்ற மனிதவள முகாமைத்துவ அணுகுமுறைகள் பற்றியும், குறிப்பான நன்கு திட்டமிடப்பட்ட தேசிய மாகாண மட்டத்தில் பின்பற்றக்கூடிய ஆசிரியவளமுகாமை தொடர்பான நடைமுறைகளின் தேவை மற்றும் அகலமானதும், உயர்தரமானதுமான கல்வி ஆய்வு நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும் என சுட்டிக்காட்டப்படுகின்றது. மனிதவள முகாமை ஆசிரியர்களின் வினைத்திறனை மேம்படுத்துகிறது. வளமுகாமையின் கூறுகளான வேதனம், வேலைச் சூழல், வேலைப்பாதுகாப்பு ஆசிரியர்களின் தொழில் திருப்தியில் தொடர்பைக் கொண்டுள்ளன எனவும் வேலைச்சூழல், வேலைநிலைமை, மேற்பார்வையாளருடனான இடைத் தொடர்பு, வேலை இலக்கு, சுயநம்பிக்கைகள் பேன்ற காரணிகள் தொழில் திருப்தியில் நேர்த்தாக்கம் செலுத்துகின்றது.

**ஆசிரியர்களின் சிறப்பை சமூக மட்டத்தில் உணர்த்துகின்ற அதேவேளை அனைத்து மட்டங்களிலும் கவனத்தை ஏற்படுத்துகின்ற உணர்வு ரீதியான தினமாக ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.**

ஊதியமானது ஓர் ஊழியர் தொழிலில் இருந்து பெற்றுக் கொள்ளும் பணரீதியான நன்மையாகும். இது ஊழியரின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. ஒவ்வொருவரும் ஒரு பொருத்தமான வெகுமதியை எதிர்பார்க்கிறார்கள். ஊதியமானது பக்கச்சார்பற்றதாக, நியாயமானதாக, சமமானதாக இருத்தல் வேண்டும். ஒரு பணியாளர் தனது ஊதியம் பக்கச் சார்பற்றதாகவும் சமமானதாகவும் இருப்பதாக உணரும்போது தொழில் திருப்தி ஏற்படுகிறது. ஊதியமானது தொழில்திருப்தியில் பெருமளவு பங்களிப்புச் செய்கிறது. இது இரண்டு காரணங்களால் சாத்தியப்படுகிறது. முதலாவதாக, பணமானது ஒருவரது தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பிரதான கருவியாகச் செயற்படுகிறது. இரண்டாவதாக சம்பளமானது ஊழியர்கள் மீதான முகாமை சார் கரிசணையின் பிரதிபலிப்பாகக் கருதப்படுகிறது. எளிமையான, நியாயமான அவர்களின் எதிர்பார்க்கைகளுடன் ஒத்துப் போகும் சம்பளக் கட்டமைப்பையே பணியாளர்கள் விரும்புகிறார்கள். ஊதியமானது நியாயமானதாக, தொழில்சார் அடிப்படையாகக் கொண்ட, தனிப்பட்டதிறன் மட்டம், சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தரம் போன்ற தகைமைகளைக் கொண்டு காணப்படின் திருப்தி கிடைக்கும் எனலாம்.

தொழில் திருப்தியை உறுதிப்படுத்துகின்ற போது ஆசிரியர்கள் வெற்றியை தக்கவைத்துக் கொள்கிறார்கள் அத்துடன் செயலாற்றுகையை உயர்வடையச் செய்கின்றது. மனிதவளமுகாமை ஊழியரின் தொழில் திருப்தியில் நேர்மயமான தொடர்பையும், செயலாற்றுகையில் குறிப்பான தாக்கத்தையும் செலுத்துகிறது. கல்வி முகாமைசார் ஆளணியினருக்கு காணப்படும் கடமைரீதியான சவால்கள், வலய மாகாணமட்ட தேசியமட்ட நடைமுறைகளின் சவால்கள் மற்றும் 13 ஆவது திருத்தச் சட்டமும் நடைமுறைச் சவால்களும் சுட்டிக்காட்டப்படுட்டுள்ளன. ஆசிரியர்களின் செயலாற்றுகையின் வினைத்திறன் மற்றும் திருப்தி நிலைமை ஆசிரியவளமுகாமையின் அமுலாக்கத்தில் தங்கியுள்ளது.

வளமுகமைத்துவத்திற்கும் ஆசிரியர் களுக்கும் இடையில் ஆரோக்கியமான இடைத்தொடர்புகள் அமைகின்ற போது கல்விச் செயலாற்றுகைகளும் பாடசாலைகளின் செயலாற்றுகை மற்றும் கல்வியின் அடைவுமட்டம் தரமானதாக அமையும்.

கல்வி நடைமுறையில் ஆசிரியர்கள் முக்கியபங்கு வகிப்பதால் அவர்களின் தொழில் சார்ந்த தேவைகள் திருப்திப்படுத்தப்படல் வேண்டும். இல்லையேல் கொள்கையாளர்களின் முயற்சிகள் வீணாகிவிடும். தமது தொழிலில் திருப்தி கொண்டுள்ள ஆசிரியர்களே விளைதிறன்மிக்க பங்களிப்பை நல்குவார்கள். தமது தொழிலில் திருப்தி அடையாத ஆசிரியர்கள், அர்ப்பணிப்பு மற்றும் விளைதிறன் அற்றவர்களாகவும், தமது உச்சகளை வெளிப்படுத்தாதவர்களாகவும் அமைந்துவிடுவார்கள். தொழிலில் குறைந்தளவு திருப்தியானது கல்வித் துறையில் கூடுதலான பிரச்னைகளை ஏற்படுத்தும். எனவே ஆசிரியர்கள் தமது வேலைத் தளங்களில் எந்தளவு சௌகரியமாக உள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்துதல் அவசியமாகின்றது.

இலங்கையைப் பொறுத்தமட்டில் ஆசிரியர் - தொழில்திருப்தி ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்பு நிலைமைகளில் ஆரோக்கியமற்ற போக்குகளை ஆய்வுகள் ஊடாவும் அனுபவ ரீதியிலும் உணரக்கூடியதாகவுள்ளது. அதேவேளை ஆசிரியர்களின் தொழில்திருப்திப் பண்புக்கூறுகளான சம்பளம், நியமனம், ஆட்சேர்ப்பு, பதவிஉயர்வு, இடமாற்றம், தரங்கணிப்பு, வாண்மைத்துவ விருத்தி, ஊக்கப்படுத்தல், ஆளணிப்பகிர்வு, மேற்பார்வை போன்ற காரணிகள் நேரான மற்றும் எதிரான தாக்கத்தை கொண்டுள்ளதையும் மற்றும் உள்ளக வெளியக காரணிகளான அரசியல் சமூகக் கராணிகள் மற்றும் தனிப்பட்ட காரணிகள் ஆசிரியர்களின் தொழில் திருப்தியில் குறிப்பாக செல்வாக்குச் செலுத்துவதை அவதானிக்கப்படக்கூடியதாக உள்ளது. எதிர்காலத்தில் ஆசிரியர்களின் தொழில்திருப்தி மட்டத்தை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை கல்விமுகாமைத்துத்தினூடாக வலுப்படுத்துதல் அவசியமாகின்றது.

குறிப்பாக ஆசிரியர்களின் தொழில் திருப்தி, தொழில் ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்பையும் உயர்த்துவதற்கு ஏதுவாக சம்பள முரண்பாடுகளை தீர்த்தல், ஆசிரியர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தொழில் சங்கங்கள் முன்வைக்கின்ற தேவைப்பாடுகளை கல்வி அமைச்சு ஆரோக்கியமான முறையில் கலந்துரையாடி தீர்வுகளை எட்டுதல், இடர்காலத்தில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஏதுவாக ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை வழங்குதல், ஆசிரியவளமுகாமையை வினைத்திறன் மற்றும் விளைதிறன் மிக்கதாக முன்னெடுத்தல், முகாமைத்துவ அணுகுமுறையை வலுப்படுத்துதல், ஆசிரியர்களுக்கு பொருத்தமான வேலைச் சூழலை கல்விமுகாமை ஊடாக உறுதிப்படுத்துதல். இடமாற்ற நடைமுறைகளில் பின்தங்கிய பிரதேச சேவை மற்றும் வெளிமாவட்ட சேவையை மேலான கவனத்தில் கொண்டு தீர்மானங்களை எடுத்தல், மேற்பார்வை நடைமுறைகளில் தரமான வெளிப்பாடுகளுக்கு ஊக்குவிப்புக்களை போதுமானதாக வழங்குதல், கடன்வசதிகளை உரியகாலத்தில் கிடைப்பதை உறுதிப்படுத்துதல் போன்றவற்றை முன்னெடுக்க முடியும். ■

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II
நேரம் : 1 மணித்தியாலம்


கல்வி tv CHANNEL

25. இரண்டு போத்தல்களில் முறையே 250 $ml$, 175 $ml$ தோடம்பழச் சாறு உள்ளது. 1 $l$ தோடம்பழச் சாற்றுப் பானத்தைத் தயாரிப்பதற்கு இரண்டு போத்தல்களிலும் உள்ள தோடம்பழச் சாற்றுடன் எவ்வளவு நீரைச் சேர்க்க வேண்டும்?

: ........................ $ml$

26. 4kg 500g தேயிலையை ஒரு பைக்கற்றில் 500g வீதம் எத்தனை பைக்கற்றுக்களில் இடலாம்?

: ..........................................................

27. 



வட்டத்தில் தரப்பட்டுள்ள எல்லா எண்களையும் பயன்படுத்தி பொது வித்தியாசம் 3 ஆகவுள்ள எண்கோலம் ஒன்றை ஆக்கி எழுதுக.

: 4, ........., ........., ........., ........., .........

28. 60 ரூபாய் விலையுள்ள புத்தகம் ஒன்றையும் 84 ரூபாய் விலையுள்ள வர்ணப்பெட்டி ஒன்றையும் வாங்குவதற்கு அமுதாவிடம் 135 ரூபாய் மாத்திரம் இருந்தது. அமுதாவுக்கு இன்னும் எவ்வளவு தேவை?

: ............................................ ரூபாய்

29. ஒரு மணித்தியாலத்தில் சிற்றுண்டிச்சாலை ஒன்றில் விற்பனை செய்யப்பட்டுள்ள இனிப்புப் பண்டங்களின் விபரம் கீழே உள்ள வரைபில் தரப்பட்டுள்ளது.




(i) கூடுதலான அளவு விற்பனை செய்யப்பட்டுள்ள இனிப்புப் பண்டம் எது?

: ..............................


அது எத்தனை? : ..............................

(ii) கேசரியின் எண்ணிக்கையைவிடக் கூடுதலாக எவ்வளவு எள்ளுருண்டை விற்பனை செய்யப்பட்டுள்ளது?

: ..........................................................

- இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

30. தேசிய கீதத்தின் ஒரு வரியை சரியாகக் காட்டும் விடை எது?
(1) நல்லெழில் பொலில் சீரணி
(2) நல்லெழில் பொலி சிரணி
(3) நல்லெழில் பொலி சீரணி

31. 
உருவில் காட்டப்பட்டுள்ள பிராணி எது?
(1) கும்பிடுபூச்சி
(2) வெட்டுக்கிளி
(3) கரப்பான்

32. அசுத்தமான உணவு, நீர் என்பவற்றை உட்கொள்வதால் ஏற்படக் கூடிய நோய்
(1) மலேரியா (2) வாந்திபேதி (3) நீரிழிவு


33. விற்றமின் A குறைபாட்டின் காரணமாக ஏற்படக்கூடிய நோய்,
(1) கண்டமாலை (2) கண்பார்வைக்குறைவு (3) இரைப்பையழற்சி

34. வீதித் தேசப்படமொன்றில் அதிவேகப்பாதை குறிப்பிடப்பட்டுள்ள நிறம்,
(1) மஞ்சள் (2) சிவப்பு (3) ஊதா

35. பிரித்தானியர்கள் இலங்கையை முழுமையாகக் கைப்பற்றிய வருடம்
(1) 1815 (2) 1505 (3) 1796

36. இறைச்சியை நீண்டகாலம் வைத்திருப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பண்டைய முறை
(1) அவித்தல்
(2) உப்புக்கரைசலில் அமிழ்த்திவைத்தல் (3) தேனில் அமிழ்த்திவைத்தல்

37. கீழே காட்டப்பட்ட எந்தச் சுற்றுக்களில் உள்ள மின்குமிழ்கள் ஒளிரும்?




A B C D

(1) A இலும் B இலும் (2) C இலும் D இலும் (3) A, B, C, D ஆகிய நான்கிலும்

38. தாவரங்களுக்குத் தீங்கு விளைவிக்கும் நத்தைகளைப் பிடித்து உண்ணும் பிராணி,
(1) கிரி (2) செண்பகம் (3) முள்ளம்பன்றி

39. ஊதுலைத் துருத்தி பயன்படுத்தப்படுவது,
(1) மீன்பிடிக் கைத்தொழிலில்
(2) கொல்லன் கம்மாலையில்
(3) சுரங்கக் கைத்தொழிலில்

40. மயக்கமடைந்த ஒருவருக்குச் செய்யக் **கூடாதது**
(1) ஆடைகளைத் தளர்த்துதல் (2) நீர் பருகக் கொடுத்தல்
(3) நன்கு காற்றோட்டம் கிடைக்கச் செய்தல்

41. பின்வருவனவற்றில் குழு விளையாட்டு **அல்லாதது**
(1) வலைப்பந்து (2) எல்லே (3) ஈட்டி எறிதல்

42. 
இந்தக் குறியீடு காணப்படக்கூடிய வீதிக்கு அருகே இருப்பது,
(1) சந்தைக் கட்டடம்
(2) பேருந்து நிலையம்
(3) நீதிமன்றம்

# கூட்டமைப்பு விரைவில் புதுடில்லிக்கு பயணம்

## இந்திய வெளிவிவகார செயலருடனான சந்திப்பின் பின்னர் வெளிவந்தது தகவல்

**கொழும்பு, ஒக். 06**
**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை பேச்சுக்காக விரைவில் புதுடில்லிக்கு அழைக்கவுள்ளது இந்திய மத்திய அரசு.**



இந்தத் தகவலை இந்திய வெளிவிவகார செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா, இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் நேரில் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரின் இல்லத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற சந்திப்பின் பின்னர் அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

"தங்களை விரைவில் மீண்டும் புதுடில்லியில் சந்திப்போம். அந்தச் சந்திப்புக்கான திகதி இந்தியத் தூதரகம் ஊடாக அறிவிக்கப்படும்" என்று இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளார் என்று கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் எம்.பி. குறிப்பிட்டுள்ளார். (இ)



# மலையகத்துக்கான உதவிகள் தொடரும்

## இ.தொ.காவிடம் இந்தியா உறுதி

கொழும்பு, ஒக். 06

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவுக்கும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள இந்திய தூதுவரின் வதிவிடத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது.

இ.தொ.காவின் பொதுச் செயலாளர் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், நிதிச் செயலாளர் மருதபாண்டி ராமேஷ்வரன் எம்.பி., இ.தொ.காவின் உப தலைவர் செந்தில் தொண்டமான் ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

இந்தியாவின் நிதிப் பங்களிப்புடன் மலையகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள, மேற்கொள்ளப்பட்டுவரும் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும், அரசியல் மற்றும் உரிமைசார் விடயங்கள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளன.

மலையக மேம்பாட்டுக்கான இந்தியாவின் உதவிகள் தொடரும் என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் இதன்போது உறுதியளித்துள்ளார். (இ)

# மேலும் 110 பேர் கைது!

கொழும்பு, ஒக். 06

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை குற்றச்சாட்டில் மேலும் 110 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் நான்கு வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் நேற்று விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 80 ஆயிரத்து 55 ஆக உயர்வடைந்துள்ளது.

அத்துடன் மேல் மாகாணத்துக்கு உள்நுழையும் மற்றும் வெளியேறும் 13 இடங்களில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து நேற்று முன்தினம் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிப் பயணித்த குற்றச்சாட்டில் 52 வாகனங்களில் வந்த 99 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது. (இ)

# குளவி கொட்டி உயிரிழந்த பெண்ணுக்கு கொரோனா

ஹப்புத்தளை, ஒக். 06

குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில் தியத்தலாவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பெண் உயிரிழந்தார்.

தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ள குறித்த பெண்ணுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஹப்புத்தளை - தொட்டலாகலை பகுதியில் கடந்த 29ஆம் திகதி தேயிலை தோட்டத்தில் பணியாற்றிய 14 பேர் குளவி கொட்டுக்கு இலக்காகியிருந்தனர்.

அவர்களில் ஹப்புத்தளை - பிட்டரத்மலை பகுதியைச் சேர்ந்த 49 வயதான பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார். (இ)

# மீரிகமவில் தம்பதி சடலங்களாக மீட்பு!

மீரிகம, ஒக். 06

மீரிகம, லிந்தர பிரதேசத்தில் வீடொன்றில் இருந்து இளம் தம்பதியினர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

26 மற்றும் 23 வயதுகளையுடையவர்களே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சடலங்கள் மீட்கப்பட்டபோது பெண்ணின் கைகள் அவரது முதுகுக்குப் பின்னால் கட்டப்பட்டிருந்தது எனவும், ஆணின் சடலம் அதற்கு அருகில் தூக்கில் தொங்கிய நிலையில் இருந்தது எனவும் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

கணவனால் மனைவி கழுத்தை நெரித்துக் கொல்லப்பட்டதன் பின்னர் அவரும் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

உயிரிழந்த இருவரும் ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரிந்தவர்கள் எனவும், அவர்களுக்கு நான்கு வயது மகன் ஒருவர் இருக்கின்றார் எனவும் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த இருவரும் பெற்றோர்களுடன் வசித்து வந்த நிலையில் அவர்கள் திருமண நிகழ்வுக்குச் சென்று திரும்பிய போது சடலங்களைக் கண்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ)

# தேயிலை பொருளாதாரம் மிகவும் ஆபத்தான கட்டத்தில்

## முன்னாள் அமைச்சர் நவீன் எச்சரிக்கை

நுவரெலியா, ஒக். 06

"உரிய மாற்று ஏற்பாடுகளின்றி இரசாயன உரப் பயன்பாட்டுக்கு அரசு தடை விதித்துள்ளதால் தேயிலை பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்படக்கூடும்."

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் பெருந்தோட்டத்துறை அமைச்சருமான நவீன் திஸாநாயக்க எச்சரிக்கை விடுத்தார்.



நுவரெலியாவில் நேற்று முன்தினம் மாலை ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"சீனாவிலிருந்து சேதன பசளை இறக்குமதி செய்வதற்கு அரசு முற்பட்டது. எனினும், கிடைக்கப்பெற்ற மாதிரிகளில் பக்ரீரியா இருப்பது உறுதிசெய்யப்பட்டது. இதனை வெளிப்படையாக அறிவித்த விவசாயத் திணைக்கள அதிகாரிகளுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். உண்மையை மறைப்பதற்கு பல அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டிருக்கலாம். குறித்த சேதன பசளைக்கு அனுமதி வழங்கியிருந்தால் அதனால் மண்ணுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கும்.

தேயிலை உற்பத்திக்கு இரசாயன உரம் அவசியம். எனினும், நிபுணர்களின் ஆலோசனை மற்றும் மாற்று ஏற்பாடுகளின்றி எடுத்த எடுப்பிலேயே உரப் பயன்பாட்டுக்குத் தடை விதிக்கப்பட்டது. இதனால் உரிய விளைச்சல் கிடைக்கப்பதில்லை. தேயிலை பொருளாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் தாக்கம் இன்னும் 5 ஆண்டுகளில் தெரியவரும்.

அதேவேளை, தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தால் பரிந்துரைக்கப்படும் உரத்தை மட்டும் பயன்படுத்துமாறு சிறுதேயிலைத் தோட்ட உரிமையாளர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்" - என்றார். (இ)

# காதல் விவகாரத்தால் இளைஞர் கத்தியால் குத்தி படுகொலை!

கேகாலை, ஒக். 06

காதல் விவகாரத்தால் இளைஞர்கள் இருவருக்கிடையில் ஏற்பட்ட மோதலில், ஒருவர் கத்தியால் குத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கேகாலை மாவட்டம், ரூவன்வெல்ல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மெருஹேன பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்



துள்ளது.

வஹரக பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயது நபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் கரவனெல்ல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய நபரைக் கைதுசெய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## உருகும் ஆர்ட்டிக் பனிப்படலம்:

# புதிய வைரஸ், பற்றீரியாக்கள் வெளிப்படும் பேராபத்து நிலை!



வாஷிங்டன், ஒக். 06

புவி வேகமாக வெப்பமடைவதால் ஆர்ட்டிக்கின் பனிப்படலம் உருகுகிறது. இதனால், அணுக்கழிவுகள், கண்டுபிடிக்கப்படாத வைரஸ்கள், எதிர்ப்பு மருந்துகளுக்கு பல னளிக்காத பற்றீரியாக்கள் பரவலாம் என ஓர் அறிக்கை எச்சரித்துள்ளது.

பனி உருகுவதால், 'பனிப்போர்' காலத்து அணுசக்தி நீர்மூழ்கி கப்பல்கள், அணு உலைகள், சுரங்கங்களிலிருந்து ஏற்பட்ட சேதங்கள் போன்றவை வெளிப்படலாம் என அந்த அறிக்கை கூறுகிறது.

ஆர்ட்டிக் பகுதியில் பனியில் உறைந்திருக்கும் 90 இலட்சம் சதுர மைல் பரப்பளவு சுமார் 10 இலட்சம் ஆண்டுகள் பழமையானவை என்பது குறிப்பிடத்தக்கது. ஆர்ட்டிக்கின் பெரும்பகுதி இன்னும் முழுமையாக அறியப்படவில்லை என்று கூறுகிறார் அபெரிஸ்ட்வெத் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவரும் இந்த ஆய்வறிக்கையின் இணை ஆசிரியருமான கலாநிதி அர்வின் எட்வர்ட்ஸ்.

கலாநிதி எட்வர்ட்ஸ், அமெரிக்க பல்கலைக்கழகங்களை சேர்ந்த கல்வி யாளர்களுடனும், தெற்கு கலிபோர் னியாவில் உள்ள நாஸாவின் ஜெட் புரொபல்ஷன் ஆய்வகத்துடனும் இணைந்து இவ்வறிக்கையை எழுதியுள்ளார்.

இயற்கை செயல்முறைகள், விபத்துக்கள், மனிதர்கள் வேண்டுமென்றே சேமித்து வைத்திருக்கும் பொருட்கள் என ஆர்ட்டிக் பகுதியில் பல்வேறு வகையான இரசாயன கலவைகள் உள்ளன. பெர்மாஃப்ரோஸ்ட் எனப்படும் நிரந்தர பனிப்படலங்கள் நிலைகுலைந்து உருகி வருவது பசுமை இல்ல வாயுக்களை வளிமண்டலத்தில் வெளியிடுவதற்கான ஒரு முக்கிய காரணியாக பார்க்கப்படுகிறது. இதன் தாக்கங்கள் மிகப் பரவலாக இருக்கும் என்றும், அணுக்கழிவுகள், கதிர்வீச்சு, அறியப்படாத வைரஸ்கள் மற்றும் கவலைக்குரிய பிற இரசாயன பொருள்கள் வெளியாவதற்கான சாத்தியக் கூறுகள் குறைவாகவே புரிந்துகொள்ளப்பட்டுள்ளது.

1955 முதல் 1990 ஆம் ஆண்டுக்கு இடையில், சோவியத் ஒன்றியம் 130 அணு ஆயுத சோதனைகளை வளிமண்டலத்திலும், வடமேற்கு ரஷ்யாவின் கடற்கரையில் நோவயா ஜெம்லியா தீவுக்கூட்டத்தின் கடலிலும் நடத்தியது. சோதனைகளில் 224 தனித்தனி வெடி சாதனங்கள் பயன்படுத்தப்பட்டன, சுமார் 265 மெகா தொன் அணுசக்தி வெளிப்பட்டது. இராணுவப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற நூற்றுக்கும் மேற்பட்ட அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்கள் அருகிலுள்ள காரா மற்றும் பேரன்ட்ஸ் கடல்களில் சிதறடிக்கப்பட்டன.

பூமியிலேயே, மூன்று மீற்றருக்கும் அதிகமான ஆழம் உள்ள பெர்மாஃப்ரோஸ்ட் போன்ற நிரந்தர உறைபனி பகுதிகள் போன்ற சில இடங்கள்தான் எதிர்ப்பு மருந்துகளையே எதிர்கொண்டிருக்காது. சைபீரியாவின் ஆழமான நிரந்தர பனிப் படலத்தில் இருக்கும் 100இற்கும் மேற்பட்ட பல்வேறு நுண்ணுயிர்கள் எதிர்ப்பு ஆற்றல் மிக்கதாக உள்ளன. அந்தப் படலம் உருகினால் அது நீரில் கலந்து புதிய எதிர்ப்பு சக்தி கொண்ட புதிய பற்றீரியா திரிபுகளை உருவாக்கும் சாத்தியம் உள்ளதாக என்றும் கூறுகிறது இந்த ஆய்வு.

பெர்மாஃப்ரோஸ்டின் அடுக்குகள் திடீரென ஆபத்தான முறையில் வெளிப்படும் போது, தொடர்ந்து பல்லாண்டு கால உயிரினங்கள் ஒரே நேரத்தில் வெளிப்படும் வாய்ப்பை இது அதிகரிக்கிறது. தொழில் புரட்சியின் தொடக்கத்திலிருந்து புதைபடிவ எரிபொருட்களின் கழிவுப் பொருள்கள் சுற்றுச்சூழலில் இருக்கின்றன. ஆர்ட்டிக்கில் ஆர்சனிக், பாதரசம், நிக்கல் போன்ற உலோகங்களும் இயற்கையாகவே இருக்கின்றன. பல பத்தாண்டுகளாக இப்பகுதியில் சுரங்கப் பணிகள் நடப்பதால், பல்லாயிரக்கணக்கான ஹெக்ரெயர் பரப்பளவில் உள்ள கழிவுப் பொருட்கள் பெரும் மாசுபாட்டை ஏற்படுத்தியுள்ளன என்று அந்த அறிக்கை கூறுகிறது. (ஐ)

## 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு ஐரோப்பாவில் 'பூஸ்டர் டோஸ்'!

பிரெச்சிட், ஒக். 06

18 வயதுக்கு மேற்பட்டோருக்கு பைசர் தடுப்பூசியின் பூஸ்டர் டோஸை செலுத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் மருந்து கட்டுப்பாடு அமைப்பு அனுமதியளித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணிகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன. அங்கு இரு தடுப்பூசி செலுத்தும் பணியில் பெரும்பங்கு நிறைவடைந்து விட்டன.

இந்த நிலையில், பூஸ்டர் டோஸை ஒன்றிய நாடுகளில் செலுத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் அனுமதி வழங்கியுள்ளது. 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே பூஸ்டர் டோஸ் ஏற்றப்படவுள்ளது. இரண்டாவது டோஸைப் பெற்ற 6 மாத இடைவெளியின் பின்னர் 3ஆவது டோஸான பூஸ்டர் டோஸைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் மருந்து கட்டுப்பாடு அமைப்பு அனுமதியளித்துள்ளது. (ஐ)

## ஆப்கானிஸ்தானில் 13 பேர் சுட்டுக்கொலை!

காபூல், ஒக். 06

ஆப்கானிஸ்தானில் 11 முன்னாள் படையினர் உட்பட 13 பேரை தலிபான்கள் கொலை செய்தனர். இவர்களில் சிறுமி ஒருவரும் அடங்குவார்.

ஆப்கானிஸ்தானில் தற்போது முழுமையாக தலிபான்களின் ஆட்சி நடக்கிறது. அவர்கள் தமக்கு எதிரானவர்களை குறிவைத்து தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், அந்நாட்டின் ஹைதர் மாவட்டத்திற்குள் கடந்த 30ஆம் திகதி நுழைந்த தலிபான்கள் முந்தைய ஆட்சியில் பணியாற்றிய இராணுவ வீரர்கள் 11 பேர் உள்பட 13 பேரை கொலை செய்தனர். இதில் 17 வயது சிறுமியும் அடக்கம் என சர்வதேச மன்னிப்பு சபை தெரிவித்துள்ளது. (ஐ)



## சர்வதேச விண்வெளி மையத்தில் சினிமா படப்பிடிப்பு நடத்தும் ரஷ்யா

மொஸ்கோ, ஒக். 06

சர்வதேச விண்வெளி மையத்தில் வைத்து படப்பிடிப்பு நடத்த உள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது. இதற்காக, ரஷ்யா ஒரு நடிகை மற்றும் ஒரு திரைப்பட இயக்குநரை வெகு விரைவில் விண்வெளிக்கு அனுப்பத் தயாராகி வருகிறது.

நடிகை யூலியா பெரிசில்ட் மற்றும் திரைப்பட இயக்குநர் ஷிபென்கோ ஆகியோர் பழைய சோவியத் - கசகஸ்தானில் உள்ள பைகோனர் காஸ்மோட்ரோமில் இருந்து இன்று புதன்கிழமை புறப்படுகின்றனர்.

மூத்த விண்வெளி வீரர் அன்ரன் ஷ்காப்லெரோவ் இந்தப் பயணத்துக்கு தலைமை தாங்குகிறார். இவர்கள் மூவரும் சோயுஸ் எம். எஸ். -19 விண்கலத்தில் 12 நாள்கள் தங்கியிருந்து சர்வதேச விண்வெளி நிலையத்தில் வைத்து படப்பிடிப்பு நடத்தவுள்ளனர். 'தி சலஞ்ச்' என்று அந்த படத்திற்கு தலைப்பு வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தாய்வான் தன்னை காக்க எந்த எல்லைக்கும் செல்லும்!

### சீனாவுக்கு அந்நாட்டு தலைவர் எச்சரிக்கை

தைபே, ஒக். 06

"தாய்வான் சீனாவின் கட்டுப்பாட்டுக்குள் சென்றால், ஆசிய பிராந்தியத்தின் அமைதிக்கு பேரழிவு ஏற்படும்", என்று தாய்வான் ஜனாதிபதி சாய் இங்-வென் எச்சரித்துள்ளார்.

தாய்வான் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள எதை வேண்டுமானாலும் செய்யும். எந்த எல்லைக்கும் செல்லும் என வெளிவிவகார அமைச்சின் ஊடகத்தில் ஜனாதிபதி சாய் இங்-வென் நேற்று செவ்வாய்க்கிழமை எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

தாய்வான் தனது இறையாண்மைக்கு உட்பட்ட பகுதி என சீனா தொடர்ந்து உரிமை கோரி வருகிறது. ஆனால், தாங்கள் இறைமையுள்ள தனி நாடு என தாய்வான் உறுதியாகக் கூறி வருகிறது. இந்நிலையில் தாய்வானை அச்சுறுத்தும் வகையில் அதன் வான்வெளியில் தனது விமானங்களை அடிக்கடி அனுப்பி அந்நாட்டின் பொறுமையைச் சோதிக்கும் வகையில் சீனா நடந்து வருகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் பீஜிங்கிடம் இருந்து பெரிய அழுத்தத்தை தாய்வான் எதிர்கொண்டு வருகிறது. வெள்ளிக்கிழமை முதலான நான்கு நாட்களில் மட்டும் தாய்வானின் வான் பாதுகாப்பு மண்டலத்தில் 148 சீன விமானப் படை போர் விமானங்கள் நுழைந்து வெளியேறியுள்ளன. (ஐ)




### பேஸ்புக், வட்ஸ்அப், இன்ஸ்ராகிராம்

## ஆறு மணி நேர முடக்கம் ரூ. 120,000 கோடி இழப்பு!

வாஷிங்டன், ஒக். 06

பேஸ்புக்கை தாய்நிறுவனமாகக் கொண்ட சமூகவலைத்தளங்கள் 6 மணி நேரம் முடங்கியதால் அந்த நிறுவனத்துக்கு 600 கோடி டொலர் - சுமார் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் கோடி இலங்கை ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 9.15 மணி முதல் (இலங்கை நேரம்) ஆறு மணித்தியாலங்கள் பேஸ்புக் அதனுடன் இணைந்த மெசெஞ்சர், வட்ஸ்அப், இன்ஸ்ராகிராம் உள்ளிட்ட பேஸ்புக்கை தாய்நிறுவனமாகக் கொண்ட சமூகவலைத்தளங்கள் இலங்கை உட்பட உலகநாடுகள் பலவற்றில் செயலிழந்தன.

உலகளவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய இந்த தொழில்நுட்ப தடங்கல் சுமார் 6 மணி நேரம் நீடித்தது. இதனால், பேஸ்புக் நிறுவனம் 600 கோடி டொலரை இழந்தது. இதனால், பேஸ்புக் நிறுவனத்தின் பங்குகள் 4.9 வீதம் சரிவை சந்தித்தன.

இதேசமயம், பேஸ்புக் நிறுவுநர் மார்க் சூகர் பெர்க்கின் 14 ஆயிரம் கோடி டொலர்கள் சொத்து மதிப்பு 12 ஆயிரத்து 160 கோடி டொலர்களாக வீழ்ச்சியை சந்தித்தது. இதனால், மூன்றாவது இடத்திலிருந்து ஐந்தாவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டார். (ஐ)

# சென்னையை வீழ்த்தி டில்லி த்ரில் வெற்றி!

டுபாய், ஒக். 06

சிம்ரொன் ஹெட்மையரின் பொறுப்பான துடுப் பாட்டம் பந்துவீச்சாளர்களின் பங்களிப்பால் சென்னை அணியை 3 விக்கெட்களால் வீழ்த்தியது டில்லி கப்பிட்டல்ஸ்.

டுபாயில் நேற்று முன்தினம் இரவு நடந்த ஐ. பி. எல்லின் 50ஆவது போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ், டில்லி கப்பிட்டல்ஸ் அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 136 ஓட்டங்களை எடுத்தது. பதிலுக்கு 137 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமாடிய டில்லி கப்பிட்டல்ஸ் 19.4 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம், டில்லி கப்பிடல்ஸ் அணி புள்ளிப்பட்டியலில் முதலிடத்துக்கு முன்னேறியது. இந்த அணி 13 போட்டிகளில் 10இல் வென்று 20 புள்ளிகளைப் பெற்றுள்ளது. சென்னை அணி 13 போட்டிகளில் 9இல் வென்று 18 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திற்கு பின்தங்கியது.

சென்னை அணி 14ஆவது போட்டியில் வெற்றி பெறாவிடின் அது பிளே ஓவ் சுற்று வாய்ப்பை இழக்கக் கூடிய நிலையும் உள்ளது. கடந்த 3 போட்டிகளில் சென்னை, கொல்கத்தாவுக்கு எதிரான போட்டியில் கடைசிப் பந்தில் வென்றது. அதற்கடுத்த போட்டியில் ராஜஸ்தானுக்கு எதிராக 180 ஓட்டங்களுக்கு மேல் பெற்ற போதிலும், சென்னை தோல்வியை தழுவியது.

இப்போது டில்லியிடம் தோற்றுள்ளது. கடந்த தொடரிலும் இந்தத் தொடரிலுமாக டில்லியுடன் மோதிய 4 போட்டிகளிலும் சென்னை தோல்வியை தழுவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேசமயம் டில்லி கப்பிட்டல்ஸ் அணி வெற்றி பெற்றுவிட்டது என்றாலும், கடந்த இரு வெற்றிகளுமே குறைந்த ஓட்டத்தை துரத்திச் சென்று அதை கடைசி ஓவரிலும், சில பந்துகள் மீதமிருக்கையிலும் துரத்தியடித்து வெற்றி பெற்றது. இதனால், டில்லி அணி தனது துடுப்பாட்ட வரிசையை ஆய்வு செய்ய வேண்டிய நிலையிலுள்ளது.

டில்லி அணியின் ஹெட்மையர் மட்டும் கடைசி நேரத்தில் நிலைக்காமல் இருந்தால் வெற்றி சென்னை வசம் சென்றிருக்கும். ஹெட்மையர் 18 பந்துகளில் 28 ஓட்டங்களைப் பெற்று இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்து அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார்.

மிகமுக்கியமான கட்டத்தில் பிராவோவின் ஓவரில் 2 பௌண்ட்ரிகள், ஹசல்வூட்டின் பந்தில் ஒரு சிக்ஸர் என விளாசி டில்லி அணியை தோல்வியிலிருந்து ஹெட்மையர் காப்பாற்றினார்.

ஆனால், ஆட்டநாயகன் விருது என்னவோ அக்ஸர் பட்டேலுக்குதான் வழங்கப்பட்டது. 4 ஓவர்கள் வீசி 18 ஓட்டங்கள் கொடுத்து 2 விக்கெட்களை வீழ்த்தி அக்ஸர் படேல் 6 டாட் பந்துகளை வீசினார், ஒரு பௌண்ட்ரி, சிக்ஸர்கூட தனது ஓவரில் சென்னையின் துடுப்பாட்ட வீரர்களை அடிக்கவிடவில்லை. அதுமட்டுமல்லாமல் அதிரடி துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திய டூ பிளசிஸ், மொயின் அலி இருவர் விக்கெட்டையும் வீழ்த்தி



திருப்புமுனையை ஏற்படுத்தியதால் ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டது.

சென்னை அணியைச் சுருட்டியதில் டில்லி அணியின் சுழல் பந்துவீச்சாளர்கள் ரவி அஸ்வின், அக்ஸர் படேல் இருவருக்கும் முக்கிய பங்கு உண்டு. இருவரும் சேர்ந்து 8 ஓவர்கள் வீசி 38 ஓட்டங்கள் கொடுத்து 3 விக்கெட்களை வீழ்த்தினர், சராசரியாக 4 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்துள்ளனர்.

கட்டுக் கோப்பாக பந்துவீசிய அஸ்வினும் 4 ஓவர்கள் வீசி 20 ஓட்டங்கள் கொடுத்து ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். தனது ஓவரில் ஒரு பௌண்ட்ரி, சிக்ஸர் கூட அடிக்கவிடவில்லை. அதற்கு அடுத்தால்போல் ரபாடா 4 ஓவர்கள் வீசி 20 ஓட்டங்கள் கொடுத்தார்.

137 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி எனும் இலக்குடன் டில்லி கப்பிடல்ஸ் அணி களமிறங்கியது. பிரித்வி ஷா, தவான் அதிரடியான தொடக்கத்தை அளித்தனர். பிரித்வி ஷா 12 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் சஹர் பந்துவீச்சில் விக்கெட்டை இழந்தார். அடுத்து வந்த ஸ்ரேயாஸ் ஐயர் நிதானம்காட்ட தவான் அதிரடியில் இறங்கினார். ஸ்ரேயாஸ் 2 ஓட்டங்களில் ஹசல்வூட்டிடம் விக்கெட்டை இழந்தார். பவர்ப்ளேயில் 2 விக்கெட் இழப்புக்கு 51 ஓட்டங்கள் சேர்த்தது டில்லி.

தவான் மட்டும் நிலைத்து ஆட ரிஷப் பந்த்(15) ஓட்டங்களில் ஜடேஜா பந்துவீச்சில் விக்கெட்டை இழந்தார். இந்தப் போட்டியில் அறிமுகமான ரிப்பால் படேல் 18 ஓட்டங்களில் ஜடேஜா பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அஸ்வின் 2 ஓட்டங்களில் தாகூர் பந்து வீச்சில் க்ளீன் போல்ட் ஆகி வெளியேறினார். நிதான மாக ஆடிய தவான் 39 ஓட்டங்களில் தாகூரிடம் விக்கெட்டை பறிகொடுத்தார்.

51 ஓட்டங்கள் வரை ஒரு விக்கெட்டை இழந்திருந்த டில்லி அணி அடுத்த 48 ஓட்டங்கள் சேர்ப்பதற்கு 5 விக்கெட்களை விரைவாக இழந்தது. ஹெட்மையர், அக்ஸர் பட்டேல் ஓரளவுக்கு களத்தில் நின்று அணியை வெற்றிக்கு நகர்த்தினர். கடைசி 3 ஓவர்களில் வெற்றிக்கு 28 ஓட்டங்கள் தேவைப்பட்டது. பிராவோ வீசிய 18ஈவது ஓவரில் ஹெட்மையர் 2 பௌண்ட்ரிகள் உட்பட 12 ஓட்டங்களையும், ஹசல்வூட் வீசிய 19ஆவது ஓவரில் சிக்ஸர் உட்பட10 ஓட்டங்களையும் சேர்த்து ஹெட்மையர் நம்பிக்கை அளித்தார்.

பிராவோ வீசிய கடைசி ஓவரில் டில்லி அணியின் வெற்றிக்கு 6 ஓட்டங்கள் தேவைப்பட்டது. முதல் பந்தில் ஹெட்மையர் 2 ஓட்டங்களும், 2 பந்தில் அகலப்பந்துடன் சேர்த்து 3 ஓட்டங்கள் ஓடினர். 3ஆவது பந்தை அக்ஸர் பட்டேல் சந்தித்தநிலையில் மொயின் அலியிடம் பிடி கொடுத்து 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்துவந்த ரபாடா ஃபைன் லெக்கில் ஒரு பௌண்ட்ரி அடித்து அணியை வெற்றி பெற வைத்தார். ஹெட்மையர் 28 ரன்களிலும், ரபாடா 4 ஓட்டங்களிலும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

சென்னை அணியைப் பொறுத்தவரை அம்பதி ராயுடுவின் அரைச்சதம் மட்டுமே ஓரளவுக்கு ஆறுதல். துடுப்பாட்ட நேற்றுமுன்தினம் படுமோசமாக இருந்தது. பந்துவீச்சு இன்னும் சிறப்பாக அமைந்திருந் தால், டில்லி அணியிடம் இருந்து வெற்றியைப் பறித்திருக்க முடியும்.

ஆனால், தீபக் சஹர், பிராவோ ஆகியோர் கடைசி நேரத்தில் இன்னும் கட்டுக் கோப்பாக வீசியிருக்கலாம். 136 ஓட்டங்கள் என்பது தற்காப்பு செய்யக்கூடிய ஓட் டம் இல்லை. என்றாலும், சென்னை அணியிடம் வலு வான பந்துவீச்சு இருப்பதால் வெற்றி பெற்றிருக்க முடியும்.

சென்னை அணியின் துடுப்பாட்டத்தைப் பொறுத்தவரை கெய்க்வாட், டூ பிளசிஸ் அதிரடியான தொடக்கத்தை அளித்தனர். நோர்ட்ஜே வீசிய முதல் ஓவரிலேயே கெய்க்வாட் 16 ஓட்டங்கள் சேர்த்தார். டூப்பிளசிஸ/ம் 2 பௌண்ட்ரிகள் அடித்து அதிரடியாக ஆரம்பித்தார். ஆனால், ஆவேஷ் கான் பந்துவீச்சில் டூப்பிளசி 10 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

கெய்வாட் 13, உத்தப்பா 19 ஓட்டங்களில் ஆட்டமிழக்க ராயுடு, டோனி கூட்டணி ஓரளவுக்கு நிலைத்து ஆடினர். இருவரும் 5ஆவது விக்கெட்டுக்கு 70 ஓட்டங்கள் சேர்த்தனர்.

ஆனால், டோனி தடுமாறினார். 27 பந்துகளைச் சந்தித்த டோனி 18 ஓட்டங்களில் ஆவேஷ் கான் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். டோனி பௌண்ட்ரி, சிக்ஸ் எதையும் ஆட்டமிழக்கவில்லை. ராயுடு 2 சிக்ஸர், 5 பெண்ட்ரிகளுடன் 53 ஓட்டங்களைப் பெற்று இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். (ஐ)

இந்தியா - பாகிஸ்தான் போட்டி

## ஒரு மணி நேரத்தில் ரிக்கெற்கள் முடிந்தன

டுபாய், ஒக். 06

இந்தியா - பாகிஸ்தான் மோதவுள்ள உலகக் கிண்ணப் போட்டிக்கான ரிக்கெற் கள் ஒரு மணி நேரத்தில் விற்றுத் தீர்ந்தன.

இருபது - 20 உலகக்கிண்ணத் தொடர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடக்கிறது. போட்டிகளை காண 70வீத ரசிகர்களை அனுமதிக்க முடிவு செய்யப்பட்டது.

இந்த நிலையில், இந்தியா - பாகிஸ் தான் அணிகளின் மோதல் எதிர் வரும் 24ஆம் திகதி நடக்கிறது. இந்தப் போட்டிக்கான ரிக்கெற் விற்பனை இணையதளத்தில் நடந்தது. ரிக்கெற் விற்பனை தொடங்கிய சில நிமிடங் களிலேயே ஆயிரக்கணக்கான ரசிகர்கள், தங்கள் இருக்கைகளை பதிவு செய்யத் தொடங்கினர்.

இதனால் 10,000 இற்கும் மேற்பட் டோர் ரிக்கெற்களை பெற இணையதளத் தில் மணிக்கணக்கில் காத்திருக்க நேர்ந்தது. இருப்பினும் விற் பனை தொடங்கிய ஒரு மணி நேரத் தில் அனைத்து ரிக்கெற்களும் விற்றுத் தீர்ந்தன.

‘ரிக்கெற்கள் பெற்றவர்கள் யாராவது விற்க முன்வந்தால் தயவு செய்து தகவல் தெரிவியுங்கள்,’ என சமூக வலைதளங் களை பலர் முற்றுகையிட்டு வருகின்றனர். (ஐ)






## முருகுஜா சம்பியன்

சிக்காகோ, ஒக். 06

சிக்காகோ ரென்னிஸில் ஸ்பெய் னின் முகுருஜா சம்பியன் வென்றார்.

அமெரிக்காவின் சிகாகோவில் பெண்களுக்கான டபிள்யு. ரி. ஏ., ரென்னிஸ் தொடர் நடந்தது. இதன் ஒற்றையர் பிரிவின் இறுதியாட்டத்தில் ஸ்பெயினின் முகுருஜா, டுனிசியாவின் ஜபேயுரை எதிர்கொண்டார்.

முதல் செற்றை முகுருஜா 3:6 என இழந்தார். இதன் பின் சுதாரித்துக் கொண்ட முகுருஜா அடுத்த செற்றை 6:3 என கைப்பற்றினார். தொடர்ந்து அசத்திய இவர் மூன்றாவது, கடைசி செற்றிலும் அசத்திய முகுருஜா 6:0 என வசப்படுத்தினார்.

முடிவில் முகுருஜா 3:6, 6:3, 6:0 என்ற கணக்கில் வெற்றி பெற்று சம்பி யன் பட்டத்தை வென்றார். (ஐ)

# கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் 35 வீதமானோருக்கு மட்டுமே தமிழ் தெரியும்

## அரசு அறிவிப்பு; இது எந்த வகையில் நியாயம் என்று சிறீதரன் எம்.பி. கேள்வி



கொழும்பு, ஒக். 06

கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் கடமையில் ஈடுபட்டுள்ள மருத்துவர்கள், ஊழியர்களில் 65 வீதமானோர் சிங்களம், ஆங்கிலம் மட்டுமே பேசக்கூடியவர்கள் என்று சுகாதார அமைச்சு தெரிவித்தது.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாவின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி. சி.சிறீதரன் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை ஆளணி நியமனம் தொடர்பில் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் எழுப்பிய கேள்விக்கு அவர் சார்பாக ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் 519 ஆக உள்ள நிலையில் 419 ஊழியர்களே பணியில் உள்ளனர். இவர்களில் 65 வீதமானோர் சிங்களம், ஆங்கிலம் மட்டுமே பேசக்கூடியவர்கள். 35 வீதமானவர்கள் மட்டுமே தமிழ், ஆங்கிலம் பேசக்கூடியவர்கள்” என்றார்.

இதன்போது குறுக்கிட்ட சிறீதரன் எம்.பி.,

“கிளிநொச்சி மாவட்டத்தில் 100 வீதம் தமிழ் மக்கள் வாழும் நிலையில் 65 வீதமானோர் சிங்களம், ஆங்கிலம் மட்டுமே பேசக்கூடியவர்களாக இருப்பது எந்த வகையில் நியாயம்? இதனால் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்” - என்றார்.

இதற்கு இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண பதிலளிக்கையில்,

“மருத்துவர்கள், ஊழியர்கள் பெறும் புள்ளிகளின் அடிப்படையிலேயே வைத்தியசாலைகளுக்கு நியமிக்கப்படுகின்றனர். அந்தவகையிலேயே கிளிநொச்சி வைத்தியசாலைக்கான ஆளணி நியமனங்களும் வழங்கப்பட்டுள்ளன. இந்த வைத்தியசாலைக்குத் தமிழ்மொழி தெரிந்தவர்களை மட்டும்தான் அனுப்ப வேண்டும் என்ற விடயத்தில் நாம் தலையிட முடியாது” - என்றார். (இ)



### வயலில் வரம்பு கட்டியவர் மின்னல் தாக்கி மரணம்!

அம்பாறை, ஒக். 06

அம்பாறை மாவட்டம், திருக்கோயில், சாகாமம் பகுதியில் மின்னல் தாக்கியதில் விவசாயி ஒருவர் உயிரிழந்தார்.

சாகாமத்தைச் சேர்ந்த 6 பிள்ளைகளின் தந்தையான தம்பிமுத்து மோகனராசா (வயது 52) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

தனது மகனின் வயலில் வரம்பு கட்டிக்கொண்டிருந்த போது மின்னல் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே அவர் மரணமடைந்தார்.

சடலம், பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (இ)

### விபத்தில் பெண் மரணம்!

கொழும்பு, ஒக். 06

கொழும்பு, கஹதுடுவ - ரிலாவல பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

நாரஹேன்பிட்டி தனியார் வைத்தியசாலைக்கு சுகாதார ஊழியர்களை அழைத்துச் சென்ற பஸ்ஸில் வயோதிபப் பெண் ஒருவர் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்வத்தில் 62 வயதுடைய ரிலாவல பகுதியைச் சேர்ந்த பெண்ணே உயிரிழந்தார்.

குறித்த விபத்து அருகில் இருந்த சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகி இருந்த நிலையில், சம்பவம் தொடர்பில் பஸ்ஸின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

# 16ஆம் திருத்தம் முழுமையாக உதாசீனப்படுத்தப்பட்டுள்ளது

## மனோ தலைமையிலான த.மு.கூ. தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.06

**“அரசமைப்பின் 13ஆவது திருத்தம் முழுமையாக அமுல் செய்யப்பட வேண்டும். மாகாண சபைத் தேர்தல்கள் துரிதப்படுத்தப்பட வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணங்களுடன் மத்திய, மேற்கு, ஊவா, சப்ரகமுவ மாகாணசபை தேர்தல்கள் உடனடியாக நடைபெறவேண்டியமை நமக்கு அவசியமானதாகும். அதேபோல், 16ஆவது திருத்தமும் முழுமையாக அமுல்செய்யப்பட்டு, தமிழ்மொழியின் அந்தஸ்து உறுதிப்படுத்தப்படவேண்டும்.”**

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணி, இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஹர்ஷ் வர்த்தன் ஷ்ரிங்லாவிடம் வலியுறுத்தியுள்ளது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. மற்றும் பிரதித் தலைவர்களான பழனி திகாம்பரம் எம்.பி., வே.இராதாகிருஷ்ணன் எம்.பி., பொதுச்செயலாளர் சந்திரா சாப்டர் ஆகியோர் உள்ளடங்களாக இந்திய வெளிவிவகார செயலாளரை நேற்று முன்தினம் கொழும்பில் சந்தித்து உரையாடியது. இந்தியத் தூதுவரின் இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது இலங் கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, துணைத் தூதர் உட்பட தூதரக அதிகாரிகள் இருந்தனர்.

இந்தச் சந்திப்பில் மனோ அணியினர் மேலும் தெரிவித்ததாவது:-

“16ஆம் திருத்தம் முற்று முழுதாக உதாசீனப்படுத்தப்பட்டுள்ளது. இத்திருத்தத்தின் மூலமாகவே தமிழ் மொழியும் ஒரு நிர்வாக மொழியாக, கல்வி மொழியாக, நீதிமன்ற மொழியாக அங்கீகரிக்கப்பட்டது. 13ஆம் திருத்தம், 16ஆம் திருத்தம் இரண்டுமே இலங்கை இந்திய ஒப்பந்தம் மூலமே இலங்கை அரசியலமைப்பில் அரங்கேறியது. ஆகவே, இவை பற்றி இந்திய அரசுக்கு கடப்பாடு இருப்பதாக நாம் நம்புகிறோம்.

சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் சாராம்சத்தின்படி இலங்கையின் ஏனைய பிரஜைகள் அனுபவிக்கும் அதே உரிமைகள், இலங்கை குடியுரிமை பெற்ற மலையக தமிழர் பரம்பரையினருக்கும் கிடைக்க வேண்டும். ஆனால், பெருந்தோட்டங்களில் வாழும் தமிழ் தொழிலாளர் குடும்பங்களுக்கு மாற்று தொழில்களுக்கான காணி உரிமைகள் மறுக்கப்படுகின்றன. 60 வருடங்களுக்கு பிறகும் நிலவுகின்ற இந் நிலைமை குறித்து இலங்கை அரசிடம் பேசுங்கள். இம்மக்கள் தொடர்பில் இந்திய அரசுக்கு கடப்பாடு இருப்பதாக நாம் நம்புகிறோம்.

13ஆம் திருத்தம் முழுமையாக அமுல்செய்யப்பட வேண்டும். மாகாண சபைத் தேர்தல்கள் துரிதப்படுத்தப்பட வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணங்களுடன் மத்திய, மேற்கு, ஊவா, சப்ரகமுவ மாகாண சபை தேர்தல்கள் உடனடியாக நடைபெற வேண்டியமை நமக்கு அவசியமானதாகும். அதேபோல், 16ஆம் திருத்தமும் முழுமையாக அமுல் செய்யப்பட்டு, தமிழ்மொழியின் அந்தஸ்து உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

16ஆம் திருத்தம் முற்று முழுதாக உதாசீனப்படுத்தப்பட்டுள்ளது. இத்திருத்தத்தின் மூலமாகவே தமிழ் மொழியும் ஒரு நிர்வாக மொழியாக, கல்வி மொழியாக, நீதிமன்ற மொழியாக அங்கீகரிக்கப்பட்டது. 13ஆம் திருத்தம், 16ஆம் திருத்தம் இரண்டுமே இலங்கை இந்திய ஒப்பந்தம் மூலமே இலங்கை அரசமைப்பில் அரங்கேறியது. ஆகவே, இவை பற்றி இந்திய அரசுக்கு கடப்பாடு இருப்பதாக நாம் நம்புகின்றோம்.

சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் சாராம்சத்தின்படி இலங்கையின் ஏனைய பிரஜைகள் அனுபவிக்கும் அதே உரிமைகள், இலங்கை குடியுரிமை பெற்ற மலையக தமிழர் பரம் பரையினருக்கும் கிடைக்க வேண்டும். இலங்கையின்மிக பின் தங்கிய பிரிவினரான பெருந்தோட்டங்களில் வாழும் தமிழ் தொழிலாளர் குடும்பங்களுக்கு மாற்று தொழில்களுக்கான காணி உரிமைகள் மறுக்கப்படுகின்றன. பாரபட்சம் காட்டப்படுகின்றது.

இந்த ஒப்பந்தம் மூலம் இலங்கையில் இருந்து மலையகத் தமிழர் நாடு கடத்தப்பட்டிருக்காவிட்டால், இன்றைய இலங்கை பாராளுமன்றத்தில், குறைந்தபட்சம் 30 தமிழ் எம்.பிக்கள் தென்னிலங்கையில் இருந்து மாத்திரம் தெரிவு செய்யப்பட்டிருப்பார்கள். ஆகவே, இந்த ஒப்பந்தம் இலங்கை மலையகத் தமிழ் மக்களின் அரசியல் பலத்தைக் குறைத்து விட்டது.

இன்று பேசப்பட்டு வரும் தேர்தல் முறை சீர்திருத்தம், இந் நாட்டில் சிதறி வாழும் நமது மக்களின் பாராளுமன்ற, மாகாண சபை பிரதிநிதித்துவங்களை இன்னமும் அபாயத்துக்குள் தள்ளும் நோக்கத்தைக் கொண்டுள்ளது. இலங்கையின் ஏனைய பிரஜைகள் அனுபவிக்கும் அதே அரசியல் பிரதிநிதித்துவ உரிமைகள், இலங்கை குடியுரிமை பெற்ற மலையக தமிழர் பரம்பரையினருக்கும் கிடைக்க வேண்டும்.

1964ஆம் ஆண்டின் சிறிமா சாஸ்திரி ஒப்பந்த கைச்சாத்திடலுக்கு பின்னர் 60 வருடங்களுக்கு பிறகும் நிலவுகின்ற இந்த நிலைமைகள் குறித்து இலங்கை அரசிடம் பேசுங்கள். இதேபோல்தான் 1987ஆம் ஆண்டின் இலங்கை - இந்திய ஒப்பந்தமும் முழுமையாக அமுலாகவில்லை. இவை தொடர்பில் இந்திய அரசுக்கு கடப்பாடு இருக்கின்றது. இந்திய அரசு கொண்டுள்ள கடப்பாடுகளின் அடிப்படையில் இந்த விவகாரங்கள் தொடர்பில் இலங்கை அரசுடன் இராஜதந்திர அடிப்படையில் உரிய அழுத்தங்களை வழங்கும்படி இந்திய அரசைக் கோருகின்றோம்” - என்றனர்.

## சீனாவுடனான...

"சீனாவுடனான தொடர்புகள் பற்றி எவ்வித சந்தேகமும் கொள்ள வேண்டாம்" எனவும் இதன்போது அவர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகாரச் செயலருடன் நேற்று முற்பகல், ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில், 1960, 70ஆம் நூற்றாண்டுகளில் காணப்பட்ட நட்புணர்வு மற்றும் தொடர்புகளை மீளக் கட்டியெழுப்புவதன் அவசியம் பற்றி, ஜனாதிபதி தெளிவுபடுத்தினார். 1971இல், இந்து சமுத்திரத்தை சமாதான வலயமாக மாற்றவேண்டுமென்று, அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க முன்வைத்த யோசனையை செயற்படுத்துவதற்கான பலத்தை அதிகரித்துக் கொள்ள, இந்தியாவின் உதவியை எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கு இடையிலான தொடர்புகளை உயர் மட்டத்துக்குக் கொண்டுசெல்லவேண்டுமாயின், குறுகிய மற்றும் நீண்டகாலத் தேவைகளின் பொருட்டு முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளைத் துல்லியமாக அடையாளம் காணவேண்டுமென்பது, இரு தரப்பினதும் கருத்தாக அமைந்திருந்தது.

தற்போது காணப்படும் பிரச்னைகளுக்கான தீர்வுகளை விரைவாக அடையாளம் காண்பதுடன், மீனவ சமுதாயத்துக்குக் கிடைக்கவேண்டிய நன்மைகளைப் பெற்றுக்கொடுத்து, இரு நாடுகளினதும் மீனவர்கள் எதிர்கொண்டிருக்கும் பிரச்னைகளுக்குத் தீர்வு வழங்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

இரு நாடுகளுக்கு இடையில் காணப்படும் வர்த்தக ஏற்றத்தாழ்வுகள் தொடர்பிலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, அவற்றுக்கு விரைவில் தீர்வு வழங்க வேண்டியதன் அவசியம் பற்றியும் வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணக் கோட்டையை மீட்ட தனது அனுபவத்தை எடுத்துக்கூறிய ஜனாதிபதி, காணாமல்போனோர், யுத்தம் காரணமாக கணவரை இழந்தோர் உள்ளிட்ட யுத்தத்தின் பக்க விளைவுகள் பற்றி, தான் நல்ல புரிதல் கொண்டிருப்பதாக எடுத்துரைத்தார்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தின் பலவீனங்களைப் போன்றே அதில் காணப்படும் பலம் தொடர்பிலும் கண்டறிந்து செயற்படுவதன் தேவை தொடர்பிலும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

இலங்கையிலிருந்து சென்ற தமிழ் மக்களை மீண்டும் நாட்டுக்குத் திருப்பியழைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுப்பது தனது எதிர்பார்ப்பென்று தெரிவித்த ஜனாதிபதி, அதற்காக அரசாங்கம் முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்களை வெற்றிகரமானதாக்கிக்கொள்ள, ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத் தொடரின்போது உரையாற்றி, புலம்பெயர் தமிழர்களுக்கும் வெளிநாடுகளில் வசிக்கும் தமிழ் மக்களுக்கும் பகிரங்க அழைப்பு விடுத்ததாகவும், ஹர்ஷ் வர்தன் ஷரிங்லாவிடம் எடுத்துரைத்தார்.

வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்காகதத் தனது அரசாங்கம் கடந்த காலங்களில் முன்னெடுத்திருந்த நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்திய ஜனாதிபதி, யுத்த காலத்தின்போது பாதுகாப்புத் தரப்பினரால் கைப்பற்றப்பட்டிருந்த காணிகளில் 90 சதவீதத்துக்கும் மேலானவை, அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்றும் கூறினார்.

அதேபோன்று, காணாமற்போனோரது குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவித்த ஜனாதிபதி, யுத்தத்தால் ஏற்பட்ட ஏனைய பிரச்னைகளுக்கும் உடன் தீர்வு வழங்குவதற்கான தேவை தொடர்பிலும் தெளிவுபடுத்தினார்.

இரு நாடுகளினதும் புவியியல் இருப்பிடம் தொடர்பில் தெளிவான புரிந்துணர்வு இருப்பின், இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடிய எந்தவொரு செயல்பாட்டுக்கும் இலங்கையைப் பயன்படுத்திக்கொள்ள இடமளிக்கப் போவதில்லை என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சீனாவுடனான தொடர்புகள் பற்றி மிகத் தெளிவாக எடுத்துரைத்த ஜனாதிபதி, அது தொடர்பில் எவ்வித சந்தேகமும் கொள்ளவேண்டாமென்று, இந்திய வெளிவிவகாரச் செயலாளரிடம் தெரிவித்தார்.

இலங்கையில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. அதனால், இந்திய முதலீட்டாளர்களுக்கு பகிரங்க அழைப்பு விடுப்பதாக, ஜனாதிபதி தெரிவித்தார்.

திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகள் தொடர்பான பிரச்னையை, இரு நாடுகளுக்கும் பயனுள்ள வகையில் தீர்த்துக் கொள்ளும் பொறுப்பு, விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இரு நாடுகளுக்கு இடையிலான சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பிலும், இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் முப்படையினருக்கு, இந்தியாவில் வழங்கப்படும் பயிற்சிகளை விரிவாக்குவது தொடர்பிலும், இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.

மின்சாரத்தை அதிகளவில் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களை அடையாளம் கண்டு, இரு நாடுகளுக்கிடையில் மின்சாரக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது.

கொவிட் தடுப்பூசி ஏற்றல் தொடர்பில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பாராட்டிய இந்திய வெளிவிவகாரச் செயலர், கோவிட் கட்டுப்பாட்டுக்கு இலங்கை முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் மகிழ்ச்சி தெரிவித்தார்.

ஜனாதிபதியின் நீண்ட நேர தெளிவுபடுத்தல் தொடர்பில் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்ள இந்திய வெளிவிவகாரச் செயலர், இரு நாடுகளுக்கும் இடையிலான கருத்துக்கள் சமனாக இருப்பதால், இரு நாடுகளுக்கு இடையிலான நட்புணர்வைத் தொடர்ந்து முன்னோக்கிக் கொண்டுசெல்ல முடியுமென்றும் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமரை இலங்கைக்கு இராஜாங்க விஜயமொன்றை மேற்கொள்ள அழைப்பதாகவும், இந்திய வெளிவிவகாரச் செயலரிடம் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே ஆகியோரும், இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

## 782 தொற்றாளர்...

உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 22 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 477 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 77 ஆயிரத்து 851 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

## கொரோனா...

எண்ணிக்கை 13 ஆயிரத்து 142 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 40 பேரில் 22 ஆண்களும், 18 பெண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 3 ஆண்கள், பெண் ஒருவர் என 4 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 36 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 19 ஆண்களும், 17 பெண்களும் அடங்குகின்றனர். (இ)

## புலம்பெயர்...

உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல, புலம்பெயர் தமிழர்களுடன் பேசுவதற்கு தயார் என்று ஜனாதிபதி கூறியுள்ளமையை வரவேற்பதுடன், அதன்மூலம் ஏதேனும் இணக்கப்பாட்டுக்கு வரமுடியுமாக இருக்குமாக இருந்தால் அதற்கு நாங்கள் ஆதரவளிப்போம் என்றும் கூறினார்

எனினும் சர்வதேச சமூகத்தை வெற்றி கொள்ள வேண்டுமானால் அரசாங்கம் சிலவற்றை நிறைவேற்ற வேண்டியது அவசியமானது என்றும், அதன்படி மனித உரிமைகள், ஜனநாயகம், ஊடக சுதந்திரம், தொழிற்சங்க உரிமைகளை பாதுகாக்க நடவடிக்கையெடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை நடைபெற்ற பெறுமதி சேர் வரி திருத்தச்சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

"ஐரோப்பிய ஒன்றியத்தின் அதிகாரிகளை நாங்கள் சந்தித்தோம். அவர்கள் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் இலங்கையின் கடந்த 2 வருட கால நிலைமை தொடர்பான புரிந்துணர்வுடனேயே வந்துள்ளனர். மனித உரிமை மீறல்கள், மக்கள் அடிப்படை உரிமை கட்டுப்பாடுகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக அறிந்துள்ளனர்.

எனினும் அந்த சந்திப்பின் போது எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, என்ன பிரச்சனை இருந்தாலும் ஜீ.எஸ்.பி சலுகையை நிறுத்த வேண்டாம் என்று கூறினார். இவ்வாறு கூறும் போது அந்தக் குழுவின் தலைவர் தெரிவிக்கையில், நாங்கள் ஆரம்பத்தில் இருந்து அவதானம் செலுத்தி வருகின்றோம். 2015 ஆரம்ப காலத்தில் நல்லாட்சி அரசாங்கத்தினால் முன்வைத்த விடயங்கள் தொடர்பில் ஆச்சரியமடைந்தோம் என்றார்.

குறிப்பாக நல்லிணக்கம், சிறுபான்மையினர் தொடர்பில் அவதானம் செலுத்தல், 19 ஆவது திருத்தம் ஆகியன தொடர்பில் கூறினர். 19 ஆவது திருத்தத்தை தற்போது மாற்றுவது தொடர்பிலும் கூறியுள்ளனர். இந்த விடயத்தில் இருந்து நாங்கள் படிக்க வேண்டிய விடயங்கள் உள்ளன. ஐரோப்பிய ஒன்றிய குழு இலங்கையில் இருக்கையிலேயே, ஊடகவியலாளர்களை சி. ஐ.டி.க்கு அழைத்துள்ளனர். இவர்கள் இந்த அரசாங்கத்தை கொண்டு வர பங்களித்தவர்கள். வெள்ளைப்பூண்டு மோசடி தொடர்பில் எழுதியமைக்காக இவர்கள் சி. ஐ.டி.க்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை குற்றமிழைக்கவில்லை என்று யார் கூற வேண்டும்? நாங்கள் கூறியோ, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரீஸ் கூறுவதிலோ பலனில்லை. சர்வதேச சமூகம் இதனை கூற வேண்டும். ஆனால், அப்படி நடக்கவில்லை. மனித உரிமைகள் பேரவையில் தோல்வியடைந்துள்ளோம். ஜீ.எஸ்.பிக்கு என்ன நடக்குமோ தெரியவில்லை. அவர்கள் சுயாதீன தீர்மானத்தை அறிவிப்பர்.

இந்நிலையில் ஐரோப்பிய ஒன்றியக் குழு நாட்டில் அனைத்தையும் அறிந்தே வந்துள்ளனர். பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை மாற்றினால் மாத்திரம் போதாது. 20 ஆவது திருத்தத்தை மீள மாற்ற வேண்டும். ஐரோப்பிய ஒன்றியக் குழுவினர் இங்கு அதிகாரப் பகிர்வு இல்லை என்பதனை சுட்டிக்காட்டியுள்ளனர்.

17 ஆவது திருத்தத்தை கொண்டு வந்தவரே 18 க்கு ஆதரவளித்து பின்னர் 20 ஆவது திருத்தத்திற்கும் ஆதரவளித்துள்ளார். இவ்வாறான சந்தர்ப்பவாதிகளால் சர்வதேசத்தை வெற்றிக்கொள்ள முடியாது. தற்போது ஜனாதிபதி தமிழ் புலம்பெயர் அமைப்புகளுடன் பேசுவதற்கு தயார் என்று கூறியுள்ளார். இதனை வரவேற்கின்றோம். அவருக்கு அவர்களுடன் ஏதேனும் இணக்கப்பாட்டுக்கு வரமுடியுமாக இருக்குமாக இருந்தால் அதற்கு நாங்கள் ஆதரவளிப்போம். ஆனால், சர்வதேச சமூகத்தை வெற்றிக் கொள்ள வேண்டுமாயின் எமது நாட்டில் மனித உரிமைகள், ஜனநாயகம், ஊடக சுதந்திரம், தொழிற்சங்க உரிமைகளை பாதுகாப்பது அவசியம் என்றார்.

## வடக்கில் 680...

சாலைகளை எதிர்வரும் மீள ஆரம்பிப்பது தொடர்பில் நேற்று மெய்நிகர் வழியிலான கலந்துரையாடல் இடம்பெற்றது. இதில் சகல மாகாணங்களின் ஆளுநர்கள், பிரதம செயலாளர்கள் மற்றும் கல்வி செயலாளர்கள் பங்கேற்றிருந்தனர்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு தகவல் அளித்த வடக்கு ஆளுநர், "இலங்கையின் சகல மாகாணங்களின் ஆளுநர்களாலும் கலந்துரையாடலின்போது எடுக்கப்பட்ட முடிவின் பிரகாரம் எதிர்வரும் 21ஆம் திகதி 200 மாணவர்களுக்கு உட்பட்ட தரம் 1-5 வரையிலான வகுப்புகளை கொண்ட பாடசாலைகள் ஆரம்பமாகும். இதன்படி வடக்கு மாகாணத்தில் 680 பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படும்", என்றார். (ஐ-03)

## உயர்தர, சாதாரண...

பாடு இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. யான ஹேஷா விதானகே எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளித்து உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், .

2020 ஆம் ஆண்டு 210 பாடசாலை நாட்கள் காணப்பட்டன. ஆனால் வெறும் 65 நாட்களே மாணவர்கள் பாடசாலைக்கு சென்றிருந்தனர். குறிப்பாக இந்த வருடத்தில் மேல்மாகாணத்தில் 5 நாட்களே மாணவர்கள் பாடசாலைகளுக்கு சென்றிருந்தனர். ஏனைய மாகாணங்களில் குறைந்தது முதலாம் தவணை வரையிலாவது மாணவர்கள் பாடசாலைக்கு சென்றுள்ளனர்.

இவ்வாறான நிலையில் கல்வி பொதுத் தராதர உயர்தர, சாதாரண தர பரீட்சைகளை குறிக்கப்பட்டுள்ள திகதிகளில் நடத்தாது காலந்தாழ்த்தி நடத்த வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. அதுத் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது .இவ்விரு பரீட்சைகளும் பிற்போடப் பட வேண்டும் என்பதே எனதும் தனிப்பட்ட கருத்து என்றார்.

## யாழ். பல்கலை...

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

பட்டமளிப்பு விழாவை 7 -9 ஆம் திகதி வரை நடத்த முன்னர் திட்டமிடப்பட்டது. ஆனால், கொரோனா பெருந்தொற்றால் பட்டமளிப்பு நிகழ்வில் பெருமளவானோர் கூடுவதற்கு அனுமதிக்க முடியாது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்திருந்தார். அத்துடன், நிகழ் நிலையில் நடாத்துவதற்குத் தடை ஏதுமில்லை என்றும் அவர் கூறியிருந்தார். இந்த நிலையில், மாணவர்களின் பட்டங்களை உறுதிப்படுத்துவதற்காக நாளை நிகழ்நிலைப் பட்டமளிப்பு விழாவை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

இதன்படி, நிகழ்நிலையில் நாளை காலை 9 மணி முதல் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில், கைலாசபதி கலையரங்கில் இரண்டு அமர்வுகளாகப் பட்டமளிப்பு விழா இடம்பெறவுள்ளது. பட்டமளிப்பு விழாவை யாழ். பல்கலைக்கழகத்தின் யூ -ரியூப் https://www.youtube.com/channel/UCMNzGVtXq9_Y4oYOYEkd-7Q மற்றும் முகப்புத்தக பக்கம் https://www.facebook.com/university.jaffna மூலம் நேரலையாக பார்வையிட முடியும்.

இதேவேளை, பட்டம் பெறுபவர்களுக்கு நேரலைக்கான இணைப்புக்கள் தனித்தனியாக மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், நாடு வழமைக்குத் திரும்பியதும் மாணவர்களுக்கான சம்பிரதாய பூர்வ பட்டமளிப்பு விழா நடத்தப்படும் என்றும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-03)

ஈழநாடு
Eelanadu

# நிருபமாவின் திருட்டுத்தன பண சேமிப்பு ஒட்டுமொத்த இலங்கையருக்கும் அவமானம்

## சபையில் துஷார இந்துனில் எம்.பி. கடும் சீற்றம்

கொழும்பு, ஒக. 06

**"நிருபமா ராஜபக்ஷ வெளிநாட்டில் திருட்டுத்தனமாகச் சேமித்து வைத்துள்ள 3 ஆயிரத்து 500 கோடி ரூபா விவகாரம் ஒட்டுமொத்த இலங்கையர்களுக்கும் அவமானத்தை ஏற்படுத்தியுள்ளது.**

**- இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. துஷார இந்துனில் தெரிவித்தார்.**



*பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டமூல விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,*

*"ஒரு புறம் யொகானி என்ற பாடகி சர்வதேச அளவில் புகழ் பெற்றதையிட்டு நாம் மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்க இன்னொரு புறம் நிருபமா ராஜபக்ஷ என்ற பெண்ணும் சர்வதேச அளவில் புகழ்பெற்றதையிட்டு இலங்கையராக நாம் வெட்கப்படுகின்றோம்.*

*இந்த ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த நிருபமா ராஜபக்ஷ என்பவர் வெளிநாட்டில் திருட்டுத்தனமாக 3 ஆயிரத்து 500 கோடி ரூபாயை சேமித்து வைத்த நிலையிலேயே புகழ் பெற்றுள்ளார்.*

*இந்த 3 ஆயிரத்து 500 கோடி ரூபாயில் ஒரு மாதத்துக்கு ஒரு கோடி ரூபாய் என்ற அடிப்படையில் செலவழித்தால் 250 வருடங்களுக்கு இவரின் 5 தலைமுறைகள் சொகுசாக வாழமுடியும்.*

*ஒரு நாளைக்கு ஒரு இலட்சம் ரூபாய் என்ற வகையில் செலவழித்தாலும் 900 வருடங்களுக்கு இவரின் 18 தலைமுறைகள் இந்தப் பணத்தில் சொகுசாக வாழ முடியும்.*

*நிருபமா ராஜபக்சவுடன் ராஜபக்ஷக்களை சேர்த்தால் ஒரு சமன் பாட்டையே உருவாக்க முடியும்" - என்றார். (இ)*

# விரைவில் நியமனம்

*கொழும்பு, ஒக. 06*

*மாணவர் ஆலோசனை ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த நிலையில் இதுவரையில் நியமனம் கிடைக்காதவர்களுக்கு விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று கல்விச் சீர்திருத்தங்கள், திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.*

*பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாவின்போது ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. ரோஹிணி குமாரி விஜேரத்ன எழுப்பிய மாணவர் ஆலோசனை ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை தொடர்பான கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்த இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மேலும் கூறுகையில்,*

*"மாணவர் ஆலோசனை ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு 8 ஆயிரத்து 334 பேர் தோற்றியிருந்தனர். இவர்களில் 6 ஆயிரத்து 746 பேர் சித்தியடைந்துள்ளனர்.*

*சப்ரகமுவ, மத்திய மாகாணங்களில் இவர்களில் சிலருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரையில் நியமனங்கள் வழங்கப்படாதவர்களுக்கு விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன" - என்றார். (இ)*






## மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 01 - 12 - 1934 |  | 28 - 09 - 2021 |

### திருமதி நடராஜா ஆச்சிப்பிள்ளை

பலாலியைப் பிறப்பிடமாகவும், நிரந்திர வதிவிடமாகவும், நீர்வேலி, கைதடி, மந்துவில், கொழும்பு ஆகிய இடங்களை தற்காலிக வதிவிடமாகவும், பிரித்தானியா லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா ஆச்சிப்பிள்ளை அவர்கள் கடந்த (28.09.2021) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் சின்னையா - புதுநாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நீர்வேலியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை நடராஜாவின் அன்பு மனைவியும், லாலி யோகராஜா (New York), லோகேஸ்வரன் (அப்பாப்பிள்ளை) விக்கம் தமிழ் சமூக கூட்டமைப்பு அறக்கட்டளை - பொருளாளர் (அருள்மிகு உச்சி முருகன் கோயில்), பலாலி சமூக கூட்டமைப்பு பிரித்தானியா - பொருளாளர், சுப்பிரமணியம் (New York), பரமேஸ்வரி (Germany, Essen), காலஞ்சென்ற சிவராசா (சிவா-வளர்ப்பு மகன்) அவர்களின் பாசமிகு அன்புத் தாயாரும், சரவணபவானந்தன், றெஜினா, சந்திரோதயம் யோகராஜா ஆகியோரின் அன்பு மாமியும், ஜித்தேந்திரா யோகராஜா, லிலானி ஜித்தேந்திரா, கவித்தா சுகந்தன், சுகந்தன், சோபியா ஸ்கந்தா, ஸ்கந்தா, சுதர்ஹினி நவநீத், நவநீத், நிரோசன், சாம்பவி, துசாலினி ஆகியோரின் அன்புப் பாட்டியும்,யனுசன் சுகந்தன், அர்ஜுன் சுகந்தன், பியங்கா அக்ஷரா ஜித்தேந்திரா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

கிரியைகள்:
Sunday, 10 Oct 2021 9:15 AM - 11:00 AM
Oshwal Ekta Centre 366A Stag Ln, London NW9 9AA, United Kingdom

தகனம்:
Sunday, 10 Oct 2021 12:00 PM - 12:45 PM
Golders Green Crematorium 62 Hoop Ln, London NW11 7NL, UK

அன்னாரின் இறுதிக்கிரியை நிகழ்வில் பங்கேற்க வரும் நபர்கள் தயவுசெய்து முகக்கவசம் அணிந்து வரவும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொடர்புகளுக்கு:*
**யோகராஜா(யோகா) - மகன்**
**+17184653380**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 16 - 01 - 1945 |  | 02 - 10 - 2021 |

### பிரம்மஸ்ரீ
### பாலசுப்பிரமணிஐயர் கனகசபாபதிஐயர்

**(புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில் தேவஸ்தான ஸ்தாபகர் வழித்தோன்றல்)**

புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும், டென்மார்க்கை வதிவிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணிஐயர் கனகசபாபதி ஐயர் அவர்கள் கடந்த (02.10.2021) சனிக்கிழமை அன்று இறைபதம் சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ K.C. பாலசுப்பிரமணி ஐயர் - உருத்திராணி அம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தங்கசாமிஐயர் - அனந்தலட்சுமி அம்மா தம்பதியரின் அன்பு மருமகனும்,சரோஜினி அம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஸ்ரீராமச்சந்திரஐயர், சாவித்திரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், தனலட்சுமி (லண்டன்), மேகலா (டென்மார்க்), காலஞ்சென்ற தர்சினி (டென்மார்க்), காலஞ்சென்ற பாலகணேஷ்(டென்மார்க்), மாதங்கி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜனார்தனசர்மா(லண்டன்), இராமச்சந்திரா ஐயர்(லண்டன்), சிவசேகரகுருக்கள் (அவுஸ்திரேலியா), வித்யாதரசர்மா (நோர்வே), டினா (டென்மார்க்) ஆகியோரின் மாமனாரும்,மகாலிங்கஐயர், சுப்ரமணியகுருக்கள் ஆகியோரின் மைத்துனரும்,ராஜ்குமார், ரவின்குமார் மற்றும் காலஞ்சென்ற ரமேஸ்குமார் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், ஜெயசங்கர், ரவிசங்கர், சுசீலா, ஹேமலதா, ரமேஷ், உமா, கவிதா, சியாமலி, திவ்யா ஆகியோரின் அன்பு மாமாவும், ஸ்வராத்மிகா, ஜதூஷன், பிரணவி, ஹர்ஷன், விருஷாதன், ஸ்ர்திவாஷன், ஜஸ்மீன், ஜெர்மி, அதிஸ்யா, அவிதேஸ் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

பார்வைக்கு:
Monday, 04 Oct 2021 12:00 PM - 1:30 PM
Tuesday, 05 Oct 2021 12:00 PM - 1:30 PM
Sønderborg Kvinde- & Krisecenter Agervang 5, 6400 Sønderborg, Denmark

கிரியை:
Wednesday, 06 Oct 2021 10:00 AM - 1:15 PM
Forsamlingsgården Sundeved Nybølvej 2, 6400 Sønderborg, Denmark

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொடர்புகளுக்கு:*
**சுப்ரமணியகுருக்கள் - மைத்துனர்**
**+447984653743**

தகவல்:
**குடும்பத்தினர்.**









*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.10.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி



7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்: டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-வானம் ஏ1 திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை

**இரவு**
07.00 மணி : பாரதீ-பெண் ஆளுமை-சிவராசா சுகன்யா



08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
09.30 மணி: பத்துக்கு 10
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

---

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம் திங்கள்)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு